

MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHA IYER LIBRARY
...VANMIYUR : MADRAS-41
1091
10926
(1947)

நிலைபெற்ற சிலை

புதுயுக நிலையம்

நிலைபெற்ற சிலை

ஆசிரியர் ;
" தமிழ் ஒளி "
(விஜயரங்கம்)

புதுயுக நிலையம்
233, லிங்க செட்டி தெரு,
சென்னை - 1

முதல் பதிப்பு 7—47.
உரிமை ஆசிரியருக்கே.

விலை ரூ. 1-12-0 1-8-0

Sengunatha Mithran Press. Madras. M. S. 277 Copies 1000

முன்னுரை

"நிலைபெற்ற சிலை" என் தொடக்கப் படைப்பு! 'சுவை புதிது, பொருள் புதிது' எனச் சொல்லத்தக்க பாணியிலே இதுஇல்லாவிட்டாலும், தமிழ் நாட்டில் வளர்ந்துவரும் ஆர்வத்தை எடுத்துக்காட்ட ஒரு வாய்ப்பாக இருக்கும் என நம்புகிறேன்!

இச்சிறு துரும்பைப் பொன்னாக ஏற்றுக் கொள்ளும் அன்பும் ஆதரவும் விழிப்புற்ற தமிழர்பால் நிறைய உண்டு என்ற துணிவால் அவர்களின் அருகே மழலை மொழிகளை உதிர்த்துக் கொண்டு நிற்கிறேன்!

என் தொடக்க முயற்சிக்குத் துணைதந்து இடுக்கண்களைப் பொறுத்து, இதனை நூல் வடிவில் கொண்டுவந்த எனது அன்பு கெழுமிய தோழர் ஊ. கோவிந்தன் (புது யுக நிலையம்) அவர்கட்கு என் நன்றியும் வணக்கமும் உரியன.

1—7—'47
சென்னை.

தமிழ் ஒளி

இந்நூல்

என்பால் நீங்காப்பற்றுடைய நண்பர் புதுமைக் கவி 'குயிலன்' அவர்கட்கு.

பதிப்புரை

நிலைபெற்ற சிலை என்னும் நூல் பொதுவுடைமைக் கருத்தை அழகாக விளக்கும் ஒரு கதையாகும். இந்நூலாசிரியராகிய "தமிழ் ஒளி" (விஜய ரங்கம்) தமிழுலகத்துக்குப் புதியவரல்ல என்பது தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். "தமிழ் ஒளி" சீர்திருத்த மனப்பான்மையும் புரட்சி வன்மையும் மிக்க இளங் கவிஞர். நாடகாசிரியர், சிறுகதை எழுத்தாளர். மிக்க சிறுவயதினராகிய இவரிடமிருந்து தமிழ் உலகம் இன்னும் பல அரும்பெரும் இலக்கியத் தொண்டுகளை எதிர்பார்க்கிறது.

இந்தக் காவியத்தைப் பற்றியோ, கவிஞரைப் பற்றியோ நாம் எதுவும் கூறவேண்டியதில்லை. ஆனால் ஒன்று மட்டும் நாம் துணிந்து கூறுகிறோம்—தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது. "தமிழ் ஒளி" தாம் முதலாவதாக எழுதியிருக்கும் இந்தக் காவியத்தை நாங்கள் புதிதாக ஆரம்பித்திருக்கும் பதிப்பகத்துக்கு அளித்தமைக்கு நன்றி கூறுகிறோம். தமிழர்கள் இந்நூலை நன்கு வரவேற்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

வணக்கம்

புதுயுக நிலையத்தார்.

மாஜி மனிதர்கள்

மாக்ஸிம் கார்க்கி எழுதியது

ருஷ்யச் சிறு கதை ஆசிரியர்களுக்குள்ளே மிகவும் புகழ் பெற்றவர் **மாக்ஸிம் கார்க்கி**. அவர் எழுதிய நூற்றுக் கணக்கான சிறு கதைகளுக்குள்ளே, "**மாஜி மனிதர்கள்**" என்ற இந்தக் கதைதான் மிகவும் சிறந்ததென்று உலக முழுவதும் பாராட்டிப் புகழ்கிறது.

மாஜி மனிதர்கள் ! — என்ன விநோதமான பெயர் ! —அந்தப் பெயருக்கேற்பக் கதையும் மிக்க விநோத மாகவே இருக்கும்.

இதுவரை இந்திய மொழிகள் எதிலும் இந்நூல் வெளி வரவில்லை. எளிய தமிழில் சுவை குன்றாமல் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

— எமது அடுத்த வெளியீடு —

சோலையிற் காதலர்

ஊருக்குத் தென்றிசையிற் குளிர்ந்த தென்றல்
உலவிடுநற் சோலையிலே ஒருசார் நின்று,
"யாருக்குத் தான் இந்தப் பேறு வாய்க்கும்?
யானடைந்த இன்பத்திற் கெல்லை யுண்டோ?
காருக்குத் தன்தோகை விரித்துக் காட்டும்
களிமயிலின் சாயலினாள் காமன் செய்யும்
போருக்குத் தான்தப்பி நான்பி ழைக்கப்
பொங்குமகிழ் வுடன்இந்த இடத்தை நாடி

வந்திடுவாள் இந்நேரம்! வந்தெ னக்கே
வாயூறும் சுவைமுத்தம் தருவாள்!" என்றே
சிந்தனையின் தேரேறி மருத வாணன்
சிவந்திட்ட வான்பார்த்து, மாலைப் போது
தந்திட்ட காட்சியினைப் பருகி, உள்ளம்
தழைத்திட்ட நேரத்தில், கொம்பு சேர்ந்த
செந்தேனைப் போல்உயிரில் இனிமை யூற்றும்
செந்தமிழின் இசையாங்கு மிதந்து வந்தே,

உள்ளத்தை அள்ளிவிட, மருத வாணன்
"உயிர்பெற்றயாழ்பெற்ற இசையெ னுந்தேன்
வெள்ளத்தைப் பாய்ச்சுவதார் இவ்வி டத்தில்?
வேய்ங்குழலைத் தென்றல்போய் ஊதிற்றோ?
பள்ளத்தை நாடிவரும் நீர்ப்பெ ருக்கின்
பாய்ந்துவரும் இசை இந்தச் சோலை தன்னில்,
தெள்ளத்தெ ளிந்ததமிழ்க் கடலில் என்னைத்
தள்ளியதே" என்றுள்ளந் திளைத்தி ருந்தான்!

சோலையுதிர் மலர்வந்து தொட்ட தேபோல்
தொட்டுக்கண் மூடியதோர் கைதான்! அந்த
மாலையுதிர் மதியொளியின் முகம்ப டைத்தாள்
மலர்க்கரத்தின் மேல்,தன் கை வைத்தெடுத்துச்
"சாலையுதிர் கனிச்சாற்று மொழியி னாளே,
சற்றேகை எடுத்தென்றன் கண்தி றந்து
காலையுதிர் கதிரொளிபோல் மின்னும் வேலின்
கண்பெற்ற உன்முகத்தைக் காட்டி டாயோ?"

என்றுவகை மிக்கவனாய் மருத வாணன்
இயம்பினான்! "ஏனிந்தக் குறும்பு வார்த்தை?"
என்றந்த மங்கைதன் கை எடுத்தே
நின்றிருந்தாள் பின்புறத்தில்; "என்றன் நெஞ்சில்
ஒன்றியஎன் உயிரொளியே! உனக்கா கத்தான்
ஒருதனிய னாயிந்தச் சோலை தன்னில்
தென்றல்போல் நீஎப்போ வருவாய்?" என்று
திசைநோக்கிப் பார்த்தவணம் காத்திருந்தேன்!

தேன்சிட்டுப் போல்,பறந்து வந்து விட்டாய்!
திக்கெட்டும் இசைத் தேனைப் பாய்ச்சி விட்டாய்!
நான்தொட்டுப் பேசியதால் நாணங் கொண்டோ
நங்கை,நீ பின்புறத்தில் நின்று விட்டாய்?
கான்தொட்டுப் பயில்கின்ற மானே! உன்றன்
கனியிதழை என்னிதழ்கள் தொடட்டும்! என்னை
ஏன்விட்டுப் பிரிகின்றாய்? என்றன் னானை
எட்டிஅணைத் தேபிடித்து முத்தம் ஈந்தான்!

"தாவிவரும் வண்டுக்குத் தேனை அளளித்
தர,செந்தா மரைதானும் மறுப்ப துண்டோ?
கூவிவரும் குயிலுக்குக் கனிகொ டுக்கக்
குளிர்பொழிலும் மறுத்திடுமோ? சோலை
தன்னில்
மேவிவருந் தென்றலினைப் 'போ,போ' என்று
மென்மலரும் சொல்லிடுமோ? தங்கள் காதல்
ஏவிவரும் உணர்ச்சியினை என்ற னுள்ளம்
எட்டிஅணைக் காமலிருந் திடுமோ அத்தான்?"

என்றந்த சுவைமொழியாள் தன்க ருத்தை
எடுத்துரைத்தாள்; "தடுத்துரைக்க நான்ஒப்
பேனே!
ஒன்றந்த செவ்விதழில் உள்ள தேனை
உறிஞ்சிக்கொண் டேயிருக்க ஒப்ப வேண்டும்!
கொன்றந்த காமனையே வென்றி கொள்ளக்
குளிர்அமுதப் பொய்கையிலே குதிப்போம்,
வாராய்!
நின்றந்த நெடுவானில் என்ன பார்த்தாய்?
நீபார்த்த பொருள்நானும் பார்த்தேன்!"
என்று,

'வஞ்சி' தன் கைதொட்டான் மருத வாணன்!
வசமிழந்தாள் மான்விழியாள்! இரண்டு
யிர்கள்
நெஞ்சினிலே நிகரில்லா சுவைத்தே ஞறு!
'நீ, நான்' என் றில்லாமல் ஒன்றி விட்டார்.
மஞ்சோடி வான்நிலவை மறைக்க, பூவின்
மணமோடித் தென்றலினைக் கலக்க, வண்டின்
நெஞ்சோடி மலர்தழுவ, இருள்கி ழித்தே
நிலவோடி வான்தழுவ நிறைந்த தின்பம்!

'நேரந்தான் ஆயிற்றுப் போவோம்' என்ருள்.
"நீயிருக்க என்னருகில், என்ற னுள்ளம்
நேரத்தை நினைத்திடுமோ? நேர்ந்த கல்வி
நிலையத்தில் நம்நெஞ்சம் கலந்த துண்டு!
வீரத்தைக் கவிதைகளில் படித்தோம்; காதல்
வியன்விளைவைப் படித்தோமே! அதை
விளக்கும்
நேரத்தில் நாமிப்போ திருக்கின் ருேமே;
நினைத்துப்பார்!" என்றிட்டான் மருத
வாணன்.

இத்திப்பு நேரத்தில் இடுக்கிடும் பிரிவு

கனைத்ததொரு குரல்கேட்டார் அந்த நேரம்!
காதலர்கள் இருவருமே மனந்திகைத்தார்!
நனைத்ததவர் உடல்தன்னை வியர்வை! சுற்றி
நாற்புறமும் பார்த்தார்கள்; பின்புறத்தே
கனத்ததோர் உருவத்தைக் கண்டு விட்டார்;
கையுதறி யேவிலகி அப்பால் சென்றார்!
சினந்தோயும் முகத்துடனே, மருத வாணன்
தந்தையவர் முன்வந்து சீறி நின்றார்!

நடுங்கினாள்; நடுங்கினான்; பற்கள் தம்மை
'நறநற'வென் றேகடித்து, நற்குலத்தைக்
கெடுத்துவிட வோ,எண்ணங் கொண்டு
விட்டாய்?
கீழ்ச்சாதி நாயின்மேல் ஆசை வைத்தாய்?
ஒடுங்கியுமே கிடக்கின்ற ஏழை யெங்கே?
ஒளிர்செல்வம் படைத்திடும் உயர்வும்
எங்கே?
கடும்பாம்பு போல்எனக்கு மகனாய் வந்த
கழுதையே' என்றவர்தான் மருத வாணன்,

கன்னத்தைப் பதம்பார்க்கத் தொடங்கி
விட்டார்!
கண்கலங்கிப் பார்த்திருந்தாள் வஞ்சி! "இங்கே
என்னத்தைப் பார்க்கின்றாய் வேசி நாயே?
என்மகனை மயக்கிவிட நடிக்கின் றாயோ?
பொன்னைத்தான் பறித்துவிடத் துடிக்கின்
றாயோ?
போ,போ,போ" என்றவளைப் பிடித்துத்
தள்ளி,
என்னைத்தான் யாரென்று நினைத்துக்
கொண்டாய்?
இப்போதே உன்தோலை உரிப்பேன்!"
என்றார்.
"அப்பா,அப் பெண்ணை அடித் திட உங் கட்கு
அணுவேனும் உரிமையிலை, பார்ப்ப துந்தான்
தப்பா? அவ ளைப்பிடித்துக் கீழே தள்ளித்
தகுதியிலா இழிசொற்கள் பேசி விட்டீர்.
இப்பாவி யால்,அவளும் துன்பம் ஏற்றாள்.
இன்னும்எனை அடித்திடுங்கள்! அவளை
மட்டும்
தப்பாகப் பேசிடவே வேண்டாம்; அந்தத்
தங்கத்தைப் பித்தளையென் றெண்ண
வேண்டாம்."

என்றுபல சொல்லியுமே மருத வாணன்
எழுந்தோடித் தந்தையின்முன் நின்று
கொண்டான் !
"நன்றுநான் கொடுத்திட்ட செல்வத் தாலே
நாய்மகனே நீ,கிட்ட வந்து விட்டாய் ;
கொன்றுன்னைப் போடுகிறேன், பார்,இப்
போதே !
கொள்ளியுலைக் கிடுகின்றேன்," என்று கூறித்
தன்கையில் பலமுள்ள வரை,அன் னேனுந்
தரையினிலே வீழும்வரை அடித்து விட்டார்!

இனிமேல்,என் வீட்டினிலே கால்வைக் காதே
"ஏழைநா யுடன்ஒழிந்து போவாய்" என்று
கனிமேல்தன் கால்வைத்து நடப்ப தே,போல்
கன்னியையுங் காளையையும் வதைத்து விட்டு
நுனிமேல்தம் அறிவுவைத் தேயி ருக்கும்
நுண்ணுணர்வில் லார்அந்த இடத்தை
விட்டுப்
பனிமேல்தன் வேட்கைவைத் தேயி ருக்கும்
பள்ளமுயல் போல்துள்ளி வீடு சென்றார் !

கன்னியுளங் குமுறினள்; கதறி னள்,தன்
காதலனின் நிலைகண்டு கண்ணீர் விட்டாள்.
தன்னிலையை யும்பாரான் மருத வாணன்!
தாவியெழுந் தே,வந்து " வஞ்சி யே,உன்
பொன்னிகர்க்கும் மேனியிலே புழுதி பட்டுப்
போயிற்றே, என் னுளமும் புண்ணா யிற்றே!
மின்னிகர்க்கும் இடைமெலிந்து வீழ்ந்தாய்,
அந்தோ!
மிகுதுயர்தான் உற்றிட்டாய்; இந்த நேரம்

தனிமையிலே உன் அன்னை யிருப்பாள் அங்கே!
தவித்திடுவாள் உனைத்தேடிக் காணா விட்டால்;
இனிமையிலே யிருந்திட்டோம், எருமை வந்தே
ஏற்றிமிதித் ததுநம்மை; வருந்தி டாதே!
கனிச்சுளையின் மொழியாளே, வீடு செல்வாய்
கண்டிடுவேன் வந்துன்னைக்; கவலை
வேண்டாம்.
இனிநாமிங் கிருப்பதுவும் சரியே யல்ல"
என் றவனுங் கெஞ்சினன்; வஞ்சி நொந்தாள்!

“என்றால்அத் தான்உமக்கே இந்தத் துன்பம்,
எப்படிநான் உமைப்பிரிவேன்? காத லுக்கு
முன்னால்எத் தடைவரினும் உடைந்து போகும்!
முன்கோபத் தால்எங்கும் சென்றி டாதீர்;
பின்னால்நாம் கூடிடுவோம் பேரின் பத்தைப்
பெற்றிடுவோம், போய்வருவேன் அத்தான்”
என்றே
நன்னுதலாள் நடந்திட்டாள்; போவ தற்குள்
நானூறு தடவைஅவள் திரும்பிப் பார்த்தாள்

இளைஞன் உள்ளத்தில் எழுந்தது புரட்சி

மனங்கலங்கி னான்,மருத வாணன் அந்த
மங்கையைத் தன்அங்கந்தான் பிரிந்த
தென்றே!
தினங்கலங்கு வாள்,அவளோ என்னை எண்ணிச்
செந்தழலில் பட்டவள்போல் நொந்தாள்
இன்று;
பனங்காயின் இளநுங்கில் இருக்கும் நீர்தான்
பாவையவள் வாயூறும் நீராம்; தாழ்ந்த
இனம்என்றும், வஞ்சியினை ஏழை யென்றும்
இயம்புபவர் சுவையறியா ஈனர்” என்றான்.

இமைக்காமல் வஞ்சியினைப் பார்த்தி ருந்தான்
எண்ணஅலை யிடைநெஞ்சை அலையவிட்டே!
அமைக்கமுடி யாஅந்தப் பதுமை சென்றே
அடர்மரங்க ளிடைமறைந்தாள்; மருத
வாணன்,
"எமைப்பிரித்த பேதத்தைப் பணத்தி னின்றே
எழுகின்ற வெறிதன்னை ஏழை மக்கள்
தமைஇழிவாய் மதிக்கின்ற கொடுமை தன்னைத்
தரையினிலே புதைத்திடுவேன் என்றன் ஆவி

தந்தேனுந் தமிழ்நாட்டில் உலவு கின்ற
தாழ்வனைத்தும் வீழ்த்திடுவேன்; என்னு
ளாந்தான்
நொந்தேனும் போகட்டும் வஞ்சி தன்னை
நொடிக்குள்ளே பிரிவதினால்; காதல் தீயில்
வெந்தேனும் போகட்டும்! புரட்சி செய்தே
விடுதலையை நிலைநாட்ட விரைகின்
றேனநான்!
செந்தமிழை வளர்க்கின்ற நிலமே உன்றன்
சேயனிதோ தாவுகிறேன் சிரிப்புக் கொள்,நீ!"

என்றுரைத்துச் சோலையினை விட்டு நீங்கி
எடுத்தடிமுன் வைத்திட்டான் மருத வாணன்;
"நன்றுரைத்தார் என்தந்தை நன்மை செய்தார்;
நாட்டிற்கென் பணிதன்னைக் கூட்டி
விட்டார்!"
வென்றுரைக்கும் வீரன்போல் அவனின்
சொற்கள்
வேகத்தால் வெளிப்படுமாம்! இயற்கை
யென்னும்
மன்றுரைக்கும் தீர்ப்பெல்லா மனித ருக்கும்
வளர்செல்வம் பொதுவென்னும் நீதி யன்றோ?

ஏழையர்என் றொருசாரார் இருப்ப தற்கும்
இருநிதியம் படைத்தோர்கள் என்ற தங்கப்
பேழையர்என் றொருசாரார் இருப்பதற்கும்
பிறப்பாலே தாழ்வேற்றங் கருது தற்கும்
கோழையர்என் றொருகும்பல் இருப்ப தாலும்
கொடுஞ்சூழ்ச்சி யாலுமே ஆகும்; காட்டுத்
தாழையிலே வாழ்கின்ற பாம்பு போன்ற
தன்மையரை விட்டிடுதல் நன்மை யல்ல!

புரட்சியிலே அவனுள்ளம் புதைய, கால்கள்
போட்டியிடத் தன்நடையை நீட்டி விட்டான்.
வரட்சியிலே உள்ளதுவாம் இந்த நாடு!
வளங்கொள்ளச் செய்திடவே வேண்டும்; மக்கள்
மிரட்சியினை எய்துவர்என் றிருந்து விட்டால்
மிகவிரைவாய்ச் செல்கின்ற உலகம், நம்மைப்
புரட்சியினை அறியாத புழுக்கள் என்றும்
புதுமைஅறி யார்"என்றும் சொல்லிப் போகும்.

திரண்டெழுந்த மேகத்தின் ஓரம் சென்று
திங்களது தன்னுடலைச் சாய்க்கும்; அப்போ
புரண்டெழுந்த பேய்க்காற்று ஒலியெ ழுப்பும்!
புதர்,செடிகள் மரமெல்லாம் தலைய சைக்கும்!
மிரண்டெழுந்த பறவையெலாம் சிறக டித்தே
மென்குரலால் கூவிடுமாம்; தன்னுள்ளத்தில்
திரண்டெழுந்த புரட்சிக்குத் திட்ட மிட்டுத்
திசைநோக்கி அவன் சென்றான் விசையி னோடே!

கூடடைந்த அன்னம் கொடுஞ்செய்தி கேட்டனள்

சோலையிலே காதலனை நீங்கி, உள்ளச்
சோர்வுடனே சென்றிட்ட வஞ்சி, வீட்டின்
மூலையிலே போய்வீழ்ந்து விம்ம லாஞள்.
முதியவளாம் அவள்அன்னை எழுந்து வந்தே
"மாலையிலே சென்றநீ, இரவு பத்து
மணிவரையில் என்செய்தாய்? எங்குச்
சென்ருய்?
ஆலையிலே இருந்தொருவர் வந்தார், உன்றன்
அதிர்ஷ்டத்தை என்சொல்வேன்? அந்த ஆலை,

முதலாளிக் குனைப்பேசி மணஞ்செய் விக்க
'முயற்சிசெய் வேன்'என்று சொல்லிப் போஞர்
முதுமையினை நான்கொண்டேன்; என்றன்
கண்கள்
மூடியபின் உனக்கிங்குத் துணை,யார்? என்று
வதைபட்டுக் கிடந்தேன்நான்; இன்று வந்த
மனிதர்என் உள்ளத்திற் கமைதி தந்தார்.
புதையல்தான் கிடைத்ததடி மகளே: நாமோ
பொருள்அற்ற ஏழை! 'அவன்' தங்கப்
பேழை!

ஆலைமுத லாளிஉனை மணந்து விட்டால்
  அநுபவிப்பாய் இன்பமெலாம்; துன்ப
மென்னும்
பாலையிலே கிடந்துமே துடித்தி ருக்கும்
  பசையற்ற நிலைபோகும். அலைகொ ழிக்கும்
'வேலை'யிலே விளைகின்ற முத்தே! உன்றன்
  வியன்அழகில் முதலாளி வீட்டிற் பூச்சி!
காலையிலே மணப்பேச்சு நடக்கும்: நீதான்
  கருத்தாக நடந்துகொள் மறந்தி டாதே!"

என்றுசொலி "என்மகளே மகிழ்ச்சி தானா?
  இயம்பிடுவாய்!" என்றிட்டாள்;—வஞ்சி,
தன்னைக்
கொன்றுவிட வரும்வேற்கள் போல்,தன்
அன்னைக்
  கொட்டியுமே அளக்கின்ற சொற்கள்
கேட்டே,
"நின்றுவிடும் என்னிதயம்; என்றன் முன்னே,
  நின்றிந்தச் சொற்கள்தமைச் சொல்ல
வேண்டாம்."
என்றவளும் அழுதிட்டாள்; என்ன சேதி,
  ஏன் அழுகின்றாய்? என்றாள் வஞ்சி யின்,தாய்.

"வெளியேபோய் இந்நேரங் கழித்து நீயும்
வீடுவரும் போதே,நான் அறிந்து கொண்டேன்
உளியேஎன் உடல்தன்னைத் தறிப்ப தே,போல்
உனைக்காணு துளம்நொந்தேன் அப்போதிங்கே
புளிவிற்கும் செங்கண்ணன் வந்து நின்று,
புதுமலரின் சோலைக்குள் நீயும் அந்தக்
கிளிமூக்கன் மகன் மருதவாண னுந்தான்
கேளிக்கை நடத்துவதாய்க் கூறிப் போனுன்!

உனைப்பெற்று வளர்த்தேன்,என், உயிர்கொடுத்தே!
ஒல்லும்வகை யால்கல்வி கற்க வைத்தேன்.
நினைப்பற்றுத் தாயின்சொல் மறந்து விட்டு
நீவிரும்பும் நெறிதன்னில் ஒழுக லானுய்!
வனப்புடைய இளைஞன்தான் மருத வாணன்;
வாளெயிற்று வேங்கைஅவன் தந்தை அன்றே?
உனைப்பற்றி அவன்அறிந்தால் உன்உயிர்க்கே
உலைவைத்து விடுவானே மகளே!" என்ருள்.

என்சொல்லைக் கேட்டுநீ நடக்கா விட்டால்,
இப்போதே என்னுயிரை மாய்த்துக் கொள்
வேன் ;
வன்சொல்லைச் சொல்லியென்னை வருத்தி டாதே!
வாழ்க்கைக்கு வழிதேடிக் கொள்வாய்; ஊரின்
புன்சொல்லைப் போக்கிவிட வஞ்சி யே,நீ
புதுமாலை சூடிடுவாய் முதலாளிக்கே!
மென்சொல்லைச் சொல்லிடுவாய் ; நாளை வந்து
மேவுமணம் பேசுகிற ஆளி டத்தில்!''

தாய்சொன்ன தனைத்தையுமே கேட்டு, வஞ்சி
தலைவலியால் வதைந்திட்டாள் ; "தாயே
உன்றன்
வாய்சொன்ன தனைத்தையுமே, என்றன்
வாழ்க்கை
வளம்பெறும்நல் வழியென்று நினைத்துக்
கொண்டாய்!
நாய்சொன்ன சொல்லினிலே மயங்கி விட்டாய் ;
நானை,உன் சொற்படியே நடக்கின் றேன்,
நான்!
தாய்சொன்ன சொல்கேட்க வேண்டும் எந்தச்
சமயத்தும் அம்முடிவே சரிப்ப டாது!

இடரினிலே சிக்கினேன் ; என்ன செய்வேன் ?
எப்படியும் உன்கருத்தை முடித்து வைப்பேன்.
அடர்ந்ததோர் காட்டில்அகப் பட்ட பின்னர்
ஆபத்துக் கஞ்சுவதில் ஆவ தென்ன ?
குடலறுந்த நரிக்குட்டி நான்தான் ; அந்தோ
குடிகாரன் முதலாளி குகையை நாடி
நடக்கின்றேன் என்தூய காத லுக்கு,
நானிலத்தில் இடமில்லை, இல்லை யன்றோ ?

பள்ளியிலே நான்துள்ளி ஆடும் போது,
பருவத்தின் கரையினிலே நின்றிருந்த
கள்ளமிலா உளங்கொண்ட மருத வாணர்
கண்ணினிலே நான்பட்டு விட்டேன்; என்றன்
உள்ளமதில் அவர்உருவம் புகுந்து, காதல்
ஓவியத்தைத் தீட்டியது ; காவி யத்தின்
வெள்ளமதில் மிதக்கின்ற கவிஞனைப்போல்
மிதந்திட்டேன் அவர்காதல் பார்வை
தன்னில் !

தொட்டுசுவைத் திட இருவர் உளமும், ஆர்வத்
துடிப்பினிலே கிடக்கையிலே, சொற்க லந்து
பிட்டுசுவைத் தோம்திட்ட மிட்ட வண்ணம்,
பேராார்வச் சிறகுவிரித் தேப றந்து
கட்டுமலர்த் தேன்சொட்டும் சோலை சென்று
கருத்தொ ருமித்தே இன்பங் கண்டி
ருந்தோம்;
கொட்டுகிற தேளைப்போல் வந்தே, எம்மைக்
கொடுமைசெய் தார், அவரின் தந்தை
யன்றோ?

உணர்வோடி அவள்உள்ளந் தாக்க, அன்னாள்
உயிரோடிக் காதலனைத் தேடும் மூச்சுத்
திணறியது வஞ்சிக்கு; மருத வாணன்
திருவுருவே அவளுக்குத் தோன்றும் எங்கும்!
மணல்கோட்டை என்காதல்; பணத்தி னுக்கே
மண்டியிடும் உலகத்தில் நொண்டும் ஏழை,
தணல்பட்ட சருகன்றோ! சார மற்ற
சக்கைதான், இனிமேல்என் வாழ்க்கை
அன்றோ?

சிந்தனையில் தன்நெஞ்சைச் செலுத்த லானாள் ;
சிலந்திவலை சிக்கியதோர் ஈயைப் போலே
வந்தேகும் ; மீளும்அவள் காதல் உள்ளம் !
வடிவழகன் பால்செல்லும் சறுக்கி வீழும் !
பைந்தொடியாள் பற்பலவும் நினைத்த பின்னர்,
படுக்கத்தான் போய்விட்டாள் ; அவளின்
உள்ளம்
பந்தடிக்க மேல்பாயும் பான்மை போலே
பாய்ந்ததுவாம் விழுந்தோறும் உயர்ந்து
யர்ந்தே !

வஞ்சிநிலை அறிந்தஅவள் அன்னை, மோசம்
வருமென்று நினைத்திட்டாள் ; விடிந்து
விட்டால்,
நெஞ்சின்நிலை யறிந்திடலாம்' எனநினைத்தே
நெடுந்துயிலில் கண்தோய்த்துப் படுத்து
விட்டாள் !
துஞ்சியதன் அன்னையினைப் பார்த்து வஞ்சி,
"சூறையடித் தாயடிஎன் வாழ்க்கை தன்னை ;
கெஞ்சிநான் கேட்டாலும் ஒப்ப மாட்டாய் ;
கிழப்பருவப் பேராசை கெட்ட" தென்றாள் !

உன்விருப்பத் தால்என்றன் தூய வாழ்க்கை
ஓவியத்தை அழிக்கின்றேன் : தூய பண்பைப்,
பொன்விருப்பத் தால்போக்கும் புன்மைதன்னில்
போக்கியெனைப் பூரிப்புக் கொள்கின் றாயே!
என்விருப்பத்தால் அன்றோ எனக்கு வாழ்க்கை?
என் ஆவி யிறும்போதும் என்றன் அன்பர்
தன்விருப்பத் தால்அன்றோ சாவேன்?
பொன்னைத்
தழுவியபின் சகதியினைத் தழுவு வேனோ?

மணஞ்செய்து கொள்கின்றேன் உன்ம
னம்போல்!
மணமென்னும் பேரில்லை இதற்குச்; செத்த
பிணஞ்செய்து கொள்கின்ற சடங்கு தானே?
பிணைக்கின்றாய் கழுதைக்குப் பசுவின் கன்றைக்;
கணஞ்செய்த முடிவாலே என்வாழ் விற்குக்
காட்டெருமை வண்டிதனைப் பூட்டி
விட்டாய்;
பணஞ்செய்த செயல்அன்றோ என்னை யிந்தப்
பாழ்நிலையில் வீழ்த்தியது!" என்று
சொன்னாள்;

பலஎண்ணிப் பலபேசிப் பதைப தைத்துப்
படுக்கையிலே நடுக்குற்றுக் கிடந்த வஞ்சி
நிலைஎண்ணி நீளிரவு மனமி ரங்கி
நீங்கியது ; கீழ்த்திசையின் இருள்க லேத்துக்
கொலைஎண்ணும் உலகத்தின் நிலைமை தன்னைக்
கொடிதென்று சொல்வான் போல் கதிர்எ
ழுந்தான் !
கலைஎண்ணி வாழ்வாரோ, காலை கண்டு
கருத்துயரும் நிலைஎண்ணத் தொடங்க லானார்!

புன்மை வளர்க்க புறப்பட்டான் சொக்கன்.

சொக்கப்பன் எனும்தரகன் தூக்கம் விட்டுத்
துடித்தெழுந்து சொத்தைப்பல் விளக்கிக்
கொண்டு
மிக்கப்பல் புள்ளிகளைப் பதித்து வைத்து
மேடுபள்ளத் தோடுள்ள முகம்து டைத்து,
'மெய்க்கன்பன் எனநம்பும் உலகம், சாம்பர்
மேனிதனில் பூசிவிடில் எனஅ றிந்தே,
பொய்க்கன்ப னனஅவன் சுட்ட சாம்பர்
புழுதியினைத் தன்மேலே பூசிக் கொண்டான்.

இன்றெனக்கு வேட்டையடி, வாடி : கஞ்சி
இருந்திட்டால் கொடடி,என் கொட்டை
முத்தே !
அன்றெனக்குக் கடையினிலே காட்டினுயே ;
அறந்தாங்கிச் சேலை,யதை உன்மனம்போல்
இன்றுனக்கு வாங்கியுமே தருவேன்
சொன்னேன் ;
இல்லை... இவர்... யார்என்று நினைத்துக்
கொண்டாய் ?
என்றுனக்குத் தடைசொன்னேன்? ஆலைக்காரன்
இவர்கையில் இப்போது சுற்றுகின்றான் !
நல்லதொரு 'புதுசரக்கு' வேண்டுமென்று
நாடோறும் எனைஅவனும் நச்சரித்தான் ;
மெல்லநான் நீட்டினேன், காலந் தன்னை !
மிகப்பறந்தான் மிகுந்தபணக் காரன் அல்ல!
சொல்லிடவோ வாய் விட்டுப்?" பச்சை
நோட்டைத்
தூக்கிக்கொள் முடித்துவிடு" என்று
ரைத்தான் !
"பல்லியுமே சொல்லுதுபார், பலிக்கும் ;
பெண்ணைப்
பார்த்துவிட்டேன் முன்னேயே என்று
ரைத்தான் !

‘கொல்’லென்று சிரித்தெழுந்தாள் கொட்டை முத்து ;
“கோடியாய் நீஎங்கே தேடி னாய்சொல்?
பல்லொன்று போனதுவா? கண்ணி லொன்று
பழுதுடைய தா,மச்சான்?” என்று கேட்டாள்.
‘நில்’லென்று சொக்கப்பன் கையை நீட்டி,
“நீஎன்ன கண்டிட்டாய் போடி, போடி!
வெல்லென்று ஆடவரைக், காம னேதான்
விரும்பியே அனுப்பியதோர் செங்க ரும்பு!

வஞ்சி யெனும் பேர் சொன்னால் அழகு வந்து
வணங்குமடி ; குயில்கிளியின் கூட்டம் வந்து
கொஞ்சுமடி அவள்குரலில் ; கொடியசைந்து
கொண்டிருக்கும் இடை ;குழலில் வண்டி ருக்கும் ;
கெஞ்சுமடி மயில்வந்து நடையைக் கண்டு ;
கெட்டிப் பொன் கட்டியடி மேனி! மென்மை
பஞ்சன்றோ அவளடிதான்? பார்வை, ஆளின்
பக்கவிலா தாக்குமடி சொக்க முத்தே!

கிடைக்காது என்றுதான் நினைத்திருந்தேன்
கிளிமூக்கன், கொடிமெத்தை வீட்டுக் காரன்
மடக்கினுன் எனையிரவில் தெருவில் வந்து!
மனங்கலங்கி 'என்ன?'வெனக் கேட்டேன்;" சுட்ட
வடைக்காது சொக்கப்பா, சொல்வதைக்கேள்!
'ஜோடி'நீ தேடிக்கொண் டிருந்தால் சொல்லு?
வடக்காற்றுத் தெருவினிலே கடைசி வீட்டில்
வசிக்கின்ற வள்ளிமகள் உள்ளாள்; இப்போ.

வள்ளிமிகத் துடிக்கின்ருள் தன்ம கட்கு
வரன்தேட; நீசென்று வலையை வீசு;
நள்ளிருளில் நடந்தாலும் அவளின் மேனி
நாற்புறமும் ஒளிவீசும்; பேரா வஞ்சி!
துள்ளியுமே விளையாடும் இளமான் குட்டி:
தொடங்கிவிடு காரியத்தைப் 'போ,போ' என்று,
தள்ளினுன் பிடித் தென்னை ;ஒருக ணத்தில்
தட்டிக்கொண் டேன்தாவிப் பாய்ந்து சென்றே!

இன்னுங்கேள் : எனக்கந்த வள்ளி சொன்னாள் :
"இருநூறு ரூபாய்கள்" தருவ தாக !
பின்னுங்கேள், முதலாளி அந்த வஞ்சி
பின்னங்கால் பார்த்தாலே போதும் !
"என்னைப்
பொன்னுங்கேள், மணியுங்கேள் கொடுப்பேன்"
என்று
பொம்மைபோல் ஆடிடுவான் இவளி டத்தில்!
முன்மாலை நீங்கியபின் நேற்று வஞ்சி,
முகம்பார்த்தேன், முழுநிலவில்
அவள்வீட் டின்முன் !

இனிமேலே மதிப்பாக என்னி டத்தில்
இருந்திடவே வேண்டுமடி கொட்டை
முத்தே !
பனிமேலே கதிர்வந்து பாய்ந்து விட்டான் ;
பார்நேரம் ஆயிற்றுப் ! பழுத்த வஞ்சிக்
கனி,மேலே தொங்கும் ;நான் கடிதில் சென்று
கைப்பற்றி வருகின்றேன் ; ஆலைக் காரன்
நுனிமேலே நின்றிடுவான் எதிர்பார்த் தென்னை;
நுரையீரல் பொரித்துவை வருவேன்" என்று

சென்றிட்டான் சொக்கப்பன்: 'தட்டிக்கொண்டு
சீக்கிரத்தில் வா' என்றாள் கொட்டை முத்து;
நின்றிட்டாள் ஒருகாலில் அங்கே வள்ளி:
நெருக்கிட்டாள் வஞ்சியினை விடிந்த
துந்தான்:
வென்றிட்டாள் இறுதியிலே! "பாலை வார்த்து
விட்டாயே என்வயிற்றில்: கெட்டிப்
பொன்னே!"
என்றிட்டாள் "உன்வயிற்றில் பாலை வார்க்க
என்வாழ்வை யிழந்திட்டேன்" என்றாள்
வஞ்சி!

வஞ்யிசின் வாழ்வு இருளில் வீழ்ந்தது!

மதுநிறைந்த பொன்கிண்ணம் கையில் ஏந்தி
மஞ்சத்தில் முதலாளி அமர்ந்திருந்தான்:
மெதுவாக உள்வந்தான், சொக்கப் பன், தான்!
மீசைமேல் கைவைத்து, "வாடா சொக்கா,
எதுவரையில் முடித்தாய்நீ?" என்று
கேட்டான்;
இடையினிலே அரைக்கிண்ணம் உறிஞ்சி
விட்டான்!
"புதுசரக்கு; முடித்துவிட்டேன்; உங்க ளுக்குப்
பொருத்தந்தான்; பொன்னேதான்!"
என்றான் சொக்கன்.

அப்படிசொல், சொக்காநீ இப்போ தே,செல் ;
ஆவனசெய், எவ்வளவு ? கேட்டுவா, நீ !
இப்படி,வா, பேரென்ன ? விவரம் சொல்லு !
என்றிட்டான் முதலாளி :—"ஒருதாய்
உள்ளாள் :
மெய்ப்படிநான் சொல்கின்றேன் : பேரோ
வஞ்சி ;
வேறுதுணை யேயில்லை : தாயும் பெண்ணும்.
கைப்பிடியில் கிழவியினைக் கூட்டி வாரேன் ;
கலந்தேதான் பேசிடுவீர் நேரில்" என்றான்.
"செய்,சொக்கா ! இப்போதே பறந்து செல்நீ :
திரும்பி,வா வெற்றியுடன்;" என்று சொல்லி,
நெய்யெடுத்து மீசைக்குத் தடவிக் கொண்டான்:
நீண்டகால் விரித்திட்டான் சொக்கப்
பன்,தான் !
கையூன்றி அமர்ந்திருந்தாள் வள்ளி ஆங்கே !
காலூன்றி நின்றான்போய் சொக்கன்
—இன்பம்
மெய்யூற எழுந்திட்டாள் கிழவி ; சொக்கன்
மெய்யாகப் பழம் !"என்று பல்இளித்தான் !',

சொன்னபடி தரவேண்டும் என்றான் சொக்கன் ;
தொகையாகத் தருகின்றேன் என்றாள்
வள்ளி ;
இன்னபடி முதலாளி சொன்னான் என்றான் :
" ஏற்றபடி ஆயிரத்தில் இரண்டு வேண்டும்;
கன்னல்,தனி யாயிங்கே இருக்க மாட்டாள் !
காரியத்தை முடித்துவா ; நீயே சென்று !
முன்னதாய்ச் செல்'' என்றாள் : சொக்கன் ஓடி
முதலாளி யிடம் சொன்னான் ;முடித்துக்
கொண்டான் ;

கனத்தமடி யுடன் திரும்பி ஓடி வந்தான் ;
"கைநீட்டுப் பிடி'' என்றான் வள்ளி தன்னை ;
சினத்துடனே வஞ்சியிதைப் பார்த்தி ருந்தாள் !
தெரிவித்த படி,வள்ளி சொக்க னுக்கு,
மனமுவந்து பணம்தந்தாள் : வஞ்சி தன்னை,
"மகராசி நீ''யென்றான் சொக்கன் ;—"சீ,சீ''
கனத்ததொரு பணத்துண்டே உனக்கு மானம்
கடுகளவும் உண்டோடா ?'' என்றாள் வஞ்சி !

நண்பனின் உதவியை நாடினான் இளைஞன்

விடியும்வரை நடந்துசென்ற மருத வாணன்
வேற்றூரைப் போயடைந்தான்; "என்கு
றிக்கோள்,
முடியும்வரை உழைத்திடுவேன்: முடியா
விட்டால்,
முனைமுகத்தில் என்னுயிரை முடிப்பேன்''
என்றான்.
இடியும்வரை பணக்காரக் கோட்டை, சாதி
இழிவுடனே பொருள்எற்றத் தாழ்வனைத்தும்
ஒடியும்வரை தொண்டாற்றும் பெரும்ப
ணிக்கென்
உயிர்தந்தேன்; தமிழ்நாடே ஏற்றுக்கொள்,நீ!
என்றங்கே சூள்செய்தான் மருத வாணன்;
"இவ்வூர்தான் என்நண்பன் இருக்கும் ஊராம்;
சென்றுதான் பார்ப்போமே!'' என்று, மேற்கு
தெருநோக்கி நடந்திட்டான்: பெரிய மாடி
ஒன்றுதான் அத்தெருவில் இருந்த தந்த
உயர்மாடி தனில்ஒளிரும் ஓவியத்தை
நின்றுதான் பார்த்திட்டான்; மனம்நெ
கிழ்ந்தான்;
நேராக மாடியினின் றிறங்கி வந்த,

தங்கமணி, தன் நண்பன் மருத வாணன்
தனியாகத் தெருவினிலே நிற்றல் கண்டான்.
பொங்குமகிழ் வுடன் ஓடி வந்து, "நண்ப!
போட்டிருந்தால் கடிதம்,நான் வந்திருந்தே
இங்கழைத்து வாரேனே? முகத்தில் சோர்வும்
இருக்கின்ற காரணம்என்? வா,வா!
போவோம்.
எங்கள்வீ டிதுவென்றே அறியா யோ,நீ?
ஏன்நின்று திகைக்கின்றாய் அன்ப?" என்றான்.

"இல்லை—"யென் றிழுத்திட்டான் மருத
வாணன்;
"ஏதோதான் நடந்திருக்க வேண்டும்;
பின்னர்
சொல்லிவிடு; முதலிற்போய் உணவருந்தித்
தொடங்கிடலாம் நம்பேச்சை!" என்றான்—
அன்பின்
எல்லையிலே தங்கமணி நின்றான்; தாவி
இருதோளும் பூரிக்க அணைத்துக் கொண்டு,
சொல்லினிலே விளக்கிடவும் முடியா அன்பைச்
சொரிந்தகமே மகிழ்வுற்றான் மருத வாணன்!

உணவருந்தி முடித்தார்கள் இருவ ருந்தான்!
உளமகிழ்ந்தே உரையாடத் தொடங்கி
ஞார்கள்.
இணைந்திருந்த கல்லூரி நட்பை எண்ணி
இருவருமே கண்களிலே நீர்நி றைத்தார்!
அணங்கந்த வஞ்சிக்கும் தனக்கும் காதல்
அணைப்புதான் வாய்த்ததொரு நிலையும்,
தந்தை
பிணங்கமழும் சுடுகாட்டு நரியைப் போலே
பெருந்துன்பம் விளைத்ததையும் உரைத்துப்,
பின்னர்

தன்முடிவும் உரைத்தனனும்!—இந்த நாட்டில்
தடையுண்டாம் உரிமைக்குக்; காத லுக்கு!
பொன்முடிப்பின் முன்மனிதன் பொட்டுப் பூச்சி.
போக்கிடவே வேண்டும்இந் நிலைமை தன்னை
பொன்முடிகொள் மன்னரையும் வீழ்த்தி, நல்ல
புரட்சியினை உண்டாக்கும் எழுது கோலின்
மென்முடியின் அணைப்பாலே எழுப்பும் தாட்கள்
மிகவிரைவில் நானெழுப்ப உதவ வேண்டும்.

உதவும் நேரத்தில் ஊறு வந்தது

'நன்முடிவு தரவேண்டும் நண்பா' என்றான்.
"நானுனக்கு முடிந்ததெலாம் செய்வேன்"
என்றே
சொன்முடிக்கு முன்னேயே சொல்லிவிட்டான்
சுடர்தங்க மணி;—அவர்சொல் முடியுமுன்னே
கன்முடிகொள் மலைபோலும் இடையில்வந்தே
கவ்வியதோர் தடைஅந்தோ! கடல்கடந்தே
முன்முடிவு செய்திருந்த படியே சென்று
முதல்வைத்து வியாபாரஞ் செய்து வந்த

தங்கமணி தந்தையவர் இடத்திருந்தே
"தந்தி"யது வந்ததுவாம்! "காச நோயால்
அங்கமது மெலிந்துமிக ஆபத்தாகி
ஆவியிறும் நிலையினிலே உள்ளேன்; சற்றும்
தங்காது புறப்பட்டுக் கணத்திலேயே
தாவும்அலை கடல்தாண்டும் கப்பல் ஏறி
இங்கேதான் வந்தென்னைக் காக்க வேண்டும்"
எனத்தங்க மணிதந்தை வரைந்திருந்தார்.

தந்தியினைக் கண்டவுடன் மிகத்துடித்து
தங்கமணி யழுதிட்டான்; மருதவாணன்
குந்தியதோர் இடம்விட்டுக் கண்கள் சுற்றக்
குப்புறவே தரைதன்னில் வீழ்ந்து விட்டான்
தந்தைநிலை வெளியூர்க்குச் சென்ற என்றன்
தாய்க்குடனே தெரிவிக்க வேண்டும் என்று
சிந்தைநிலை கெட்டிருந்த மருத வாணன்
தன்னிடத்தில் தங்கமணி தெரிவித் திட்டான்.

உடன்ஓடி இருவருமே தந்தி மூலம்
உறுசெய்தி அன்னையூர்க் கனுப்பிவிட்டுக்
கடல்தாவும் பயணத்தின் சீட்டு வாங்கிக்
கப்பல்தளம் சென்றூர்கள் கண்க லங்க.
“கடலூற்றப் புறப்பட்டாய் இங்குவந்தே
கடையேனைச் சந்தித்தாய் உதவி செய்துன்
உடனூற்றப் பணி, வாய்ப்பு கிடைக்கவில்லை
உயிர்அன்ப!” எனத்தங்க மணிஉ ரைத்தான்.

கையிரண்டும் மெய்சேரத் தழுவி", அன்ப!
கண்ணிரண்டும் அற்றதொரு குருடன் யான்
மெய்யிரண்டும் பிரியாது எனநினைத்தேன் [நம்
மேலிருந்து வீழ்ந்ததிடி என்றன் நெஞ்சில்!
ஐயிரண்டு கிழமைக்குள் திரும்புகின்றேன்
அதுவரையில் நீஎங்கும் செல்ல வேண்டாம்
பையிரண்டு வைத்துக்கொள் இந்தா!" என்றே
பணப்பைகள் இரண்டவனின் கையில் தந்தே

விடை கேட்டான் தங்கமணி—மருதவாணன்,
"விட்டுநான் பிரிகின்றேன் உயிரை" என்றான்
இடைகேட்க இசைந்தீந்த வஞ்சி யென்னும்
இளமயிலை விட்டன்று பிரிந்த தேபோல்
படைகேட்கும் நேரத்தில் கூட்ட மாகப்
பகைவந்து விடக்கேட்ட வீரன் போலும்
விடைகேட்கும் தன்நண்பன் முகத்தை நோக்கி
மெய்சோர நின்றிட்டான் மருத வாணன்.

பிரிவால் நண்பர் பெரிதும் கலங்கினர்

இருநண்பர் முகங்களிலும் பிரிவின் ஏக்கம்
ஏறியது ; நட்பெல்லாம் திரண்டு வந்தோர்
உருக்கொண்டு நின்றதுவர் பார்வை தன்னில் !
'ஓ'வென்று கூவியது கப்பல்; வானில்
இருண்டுவரும் மேகத்தைக் கண்டு மெல்ல
எடுத்தடிவைத் தான்கப்பல் நோக்கி—
பின்போர,
உருண்டுவரும் அன்பென்னும் வெள்ளம்வீழ்ந்தே
ஒருகண்ணால் தங்கமணி பார்த்தான்; "சென்று

நலமுடனே திரும்பிடுக!" என்றுரைத்து
நாக்குழற நின்றிட்டான் மருத வாணன் !
கலம்ஏறிக் கைகாட்டி வானைக் காட்டிக்
'கடிதுசெல்' எனக்கையை ஆட்டி, ஈர
நிலம்பெற்ற நெல்விதைகள் முளைத்தல்போலே
நீர்துளிக்கக் கண்களிலே—கடல்முழக்கும்
அலைபோல தன்நெஞ்சை அலையவிட்டே
அடிபெயர்க்கா தேநின்று பார்த்திருந்த

தங்கமணி தனைப்பார்த்து மீண்டும் நெஞ்சில்
தாவிவரும் துக்கத்தால் கூவி யே,தன்
அங்கமதைக் கிழித்தேகும் தன்மை போலே
அலைகடலின் நீர்தன்னைக் கிழித்துக் கொண்டு
கங்குலெனப் புகைகக்கி நகர்ந்து சென்ற
கப்பலிலே கண்வைத்த மருத வாணன்,
மங்கும்வரை தன்பார்வை மரக்க லந்தான்
மறையும்வரை இமைக்காமல் பார்த்தி
ருந்தான்.

கலம்மறைந்த பின்னர்தன் கையை ஏதோ
கனத்த பொருள் இழுத்திடவும் பரந்தஇந்த
நிலந்தன்னில் இருக்கின்ற நினைவுவந்து
நிமிர்ந்ததலை குனிந்திட்டான்; கையி னின்றும்
உலகத்தின் உயிர்நாடி யாம் பணத்தை
உள்ளடக்கிக் கொண்டுள்ள பையிரண்டும்
நிலத்தினிலே வீழ்ந்தனவாம். குனிந்தெ டுத்து
"நீயேறிக் கொண்டவிடம் தீயே" என்றான்.

பொருளெல்லாம் பொதுவென்னும் நீதியில்லாப்
புகைசூழ்ந்த இந்நாட்டில் பணம்படைத்தால்
அருளுள்ள நெஞ்சத்தார் ஆதலோடும்
அப்பொருளை நாட்டிற்கு நல்கி விட்டால்
இருளெல்லாம் தீர்ந்துவிடும் எனும்நிலைதான்
ஏற்பட்டால் உடன்ஈந்தே உவத்தல் வேண்டும்
பொருளொருவர்க் கேயுரிமை யில்லை; நாட்டுப்
பொதுமக்கள் அனைவர்க்கும் உரிமை என்னும்

புதுக்கருத்துக் கொண்டோன் என் நண்பன்!
ஆ ஆ!
பொன்கருத்தும் இதுவன்றோ? பேதம்
எண்ணல்
மதுக்குடியின் வெறியாகும்; விதியைக் கூறி
மடக்குகிறார் ஏழையரை; சாத்திரங்கள்
இதற்குதவு கின்றனவாம் இந்த நாட்டில்!
எங்கிருந்து முன்னேற்றம் அடைவர் மக்கள்?
சதுப்புநில மாயிற்றுத் தமிழர் நாடு.
சகதியினில் கிடக்கின்றார் தமிழரெல்லாம்.

மழையில் நனைந்தான் மருத வாணன்

நொடிக்குள்ளே பலஎண்ணம் நுழைந்து வேலை
நுழைத்ததவன் நெஞ்சினிலே ; மேகம்
சூழ்ந்தே
இடிக்குள்ளே வானத்தைச் சிக்க வைத்து
இருட்குடையைக் கவிழ்த்ததுவாம் ; மேலை
வானின்
பிடிக்குள்ளே விழுந்து,கதிர் நொடிக்குள் மாயும்.
பிடர்சிலிர்க்கும் கீழ்த்திசையில் இருட்சிங்
கந்தான் !
மிடிக்குள்ளே வீழ்ந்தவரின் கண்ணி னின்றும்
வீழ்கின்ற நீர்போலே மழைநீர் வீழும்

கடலங்கே செய்தஒலி வரப்போ கின்ற
கஷ்டத்தை நினைத்திட்டக் கதறல் தானே !
' தடமெங்கே ' எனத்தடவி மருத வாணன்,
'சடசட'வென் றேபெய்யும் மழையில் சிக்கி
' இடமெங்கே? நாம்தங்க ' என நினைத்தே
ஏகினான் நகர்நோக்கி ; மேகப் பாம்பின்
விடமெங்கே? எனவாளை வீசியே தான்
வெட்டியதோ வியன்வானம்! மின்னல்ஏதோ!

வஞ்சியை வண்டியில் கொண்டு சென்றனர்

மாலைவர மகிழ்ச்சியுடன் வஞ்சிக் கேதான்
மாலையிட முதலாளி காத்தி ருந்தான்!
ஆலைதனில் இருந்தவனும் அனுப்பி வைத்த
அழகியதோர் வண்டியிலே வஞ்சி சென்ருள்.
ஓலையடர் குடிசையிலே இருந்தாள் வள்ளி
ஒளிர்வஞ்சி தன்ஞேடு சென்றி டாமல்.
பாலைபடர் கொலைவேடர் போலும் அந்தப்
பாழ்நெஞ்சத் தரகனவன் பறந்து சென்ருன்.

மூடத் தந்தை கடுஞ்சொல் மொழிந்தனன்

கிளிமூக்கன்,—'தன்மகளைக் கெடுத்து விட்டக்
கீழ்ச்சாதி வஞ்சியுமே தொலைந்தாள்' என்றே
உளிமூக்கில் பொடியுறிஞ்சி உவகை கொண்டான்
ஓடியது தறுதலைநாய்; முன்னர் எல்லாம்
சளிமூக்கில் ஒழுகும் நான் துடைப்பேன்-கெட்ட
சாதியினில் பிறந்தஅவ் வஞ்சிப் பெண்ணுல்
துளிமூக்கில் கோபத்தை ஏற்றிக் கொண்டு
தொடைதட்டி ஞன்சண்டைக் கென்னி
டத்தில்

என்மகன்தான் ஆனாலும் என்குலத்துக்
  கிழிசொல்லைத் தேடுவதா? விடுவேனா நான்?
மூன்மகன்தான் என்றுநான் நினைத்திருந்தேன்
  முழுகிவிட்டேன் தலைபின்னர்; இறக்கும்
                                        போதில்
என்மனைவி என்னிடத்தில் சொல்லிப் போனாள்
  "என்மகனைக் காப்பாற்ற வேண்டுமென்றே!"
நன்மையினைக் கருதிநான் படிக்க வைத்தேன்
  நலமில்லாப் படிப்பாலே கெட்டு விட்டான்;

போகட்டும்! நானேபோய்த் தேடமாட்டேன்
  புத்தியிருந் தால்திரும்பி வரட்டும் இன்றேல்
சாகட்டும் என்சொல்லைத் தடுத்துரைத்தான்;
  தலைப்பாகைக் காரனெலாம் என்னைக்
                                        கண்டால்
'போகட்டும்' என்றுவழி விட்டிருந்து
  போவான் பின் தெருவினிலே! எங்கேனும்
ஏகட்டும்! என்னையவன் மதிக்கவில்லை. [தான்
  என்றுளறிப் போய்ப்படுத்துக் குறட்டை
                                        விட்டான்.

தன்னந் தனிமையில் தவித்தனள் வஞ்சி

முதலாளி மிதமாக மது வருந்தி
  முல்லைமலர் மஞ்சத்தில் பரப்பி மென்மை
புதுப்பட்டின் உடைபூண்டு, வரப்போ கின்ற
  புதுப்பெண்ணின் நினைவோடு மணம்நி றைந்த
புதுரோஜா மலர்மாலை அடுக்கி வைத்துப்
  பூரிப்பில் கிடந்தவணம் எழுந்தி ருந்தே
குதிக்கஅவன் நினைத்தான்; ஆங் கதற்குள் வஞ்சி
  கொண்டுவரப் பட்டாள்அம் மாடியின்மேல்.

மஞ்சத்தை விட்டவனும் எழுந்தி ருந்தே
  வஞ்சிமுகந் தனைப்பார்த்தான்; "எனக்கிருந்த
பஞ்சத்தை ஒழித்திடுவேன் கொஞ்சி ஆடப்
  பச்சைமயில் வந்ததடா சொக்கப் பாஎன்
நெஞ்சத்தை நீதானே அறிந்தாய் இந்தா
  நீகேட்ட ரொக்கத்திற் கிருமடங்கு!
வஞ்சியெனும் மயிலே,நீ வாஎன் பக்கல்!
  மாலையிதோ நீயேதான் சூடிக் கொள்வாய்.

நானும்ஒரு மாலையினைச் சூடிக் கொண்டேன்
நல்லதொரு நேரமிது ; நம்சொக் கப்பன்
தானும்உட னிருப்போரும் இப்போ தேதான்
தாண்டிவிடு வீர்இந்த இடத்தை விட்டே.
மானும்நான் பார்த்துள்ளேன் அடடா, இந்த
மானுக்கு நிகரில்லை;—போவீர் யாரும்!
தேனும்பின் வாங்குகிற மதுவும், இந்தச்
செங்கரும்பும் எனக்கிருந்தால் போதும்"
என்றான்.

வாயில்வந்த அனைத்தையுமே சொல்லி, 'வஞ்சி
வா,வந்தென் பக்கத்தில் உட்கார் என்றான்'
பாயில்வந்த 'மூட்டை'தான் விளக்கு கண்டே
பயந்தோடி னாற்போலே அங்கி ருந்த
நாய்களெலாம் ஓடிற்று முதலா ளிக்கு
நடுங்கிக்கொண் டே!அப்போ தாசை யாலே
வாயினிலே நீர்ஊற 'வஞ்சி நீயென்
வயதுக்குத் தகுந்தவளே' என்று சொன்னான்.

தந்திரத் தாலே தப்பினாள் வஞ்சி

தீயினிலே பட்டாள்போல் துடிதுடித்துத்
திகைத்துப்பின் மனந்தேறித், 'தந்திரத்தால்
பாயினிலே வீழ்த்திடலாம் இவனை' என்றே
பக்குவமாய்ப் பேசிப்பின் ஆலைக் காரன்
வாயினிலே ஊற்றினாள் மதுவெ டுத்தே
வஞ்சியவள் தானேதான் வலிய சென்றே!
காயினிலே சுவையில்லை நான்கண் டிட்ட
காரிகைகள் அவ்வாறு கனிநீ'' என்றான்.

தலைசுற்ற மஞ்சத்தின் பக்கம் சென்று
தடிக்கைகள் இரண்டையுமே பரப்பிக்
கொண்டு
மலைசுற்றி வீழ்வதுபோல் வீழ்ந்தான் அந்த
மஞ்சத்தின் பஞ்செல்லாம் பிதுங்கும்
வண்ணம்!
குலைசுற்ற வஞ்சியவள் பயந்த வண்ணம்
"கொடுமையிலே நான்தப்பிப் பிழைக்க
வேண்டில்
'வலைசுற்ற' வேண்டுமென முடிவு செய்தே
விலகிப்போய்த் தரையினிலே படுத்துக்
கொண்டாள்.

வள்ளியின் ஆசை வளர்ந்து சென்றது

வஞ்சிதனை வண்டியிலே அனுப்பி விட்டு,
வள்ளியவள் தன்னிலையை எண்ணி எண்ணி
நெஞ்சினிறை மகிழ்வுற்றாள்; "பணத்தை
யெல்லாம்
நிதிச்சாலை தனில்சேர்த்து விட்ட பின்னர்
அஞ்சிறகு விரித்திடும் என்அன்னந் தன்னை
அடைந்திடுவேன் இதனைநான்
செய்துவிட்டால்
கஞ்சிக்குக் குறைவில்லை ஆலைக் காரன்
கைவிட்டு விட்டாலும்" என்றாள் வள்ளி.

சொக்கப்பன் சூதைத் தொடங்க லானான்

வஞ்சிதன் தாய்தந்த தொகையும் ஆலை
முதலாளி வழங்கியதோர் தொகையுங்
கொண்டு
கெஞ்சிஉயிர் வாழ்கின்ற சொக்கன் சென்றான்.
கிளிமுகம் படைத்த அவன்மனைவி வீட்டில்
துஞ்சிக்கொண் டிருந்திட்டாள் சொக்கனுக்குச்
சுவையான நுரையீரல் பொரித்துவைத்தே!
கெஞ்சிக்கொண் டெழுப்பினான் அவளை
சொக்கன்.
'கேட்டாயோ சேதியினை?' என்று சொன்னான்.

எருமைதான் சேற்றில்புரண் டெழுவ தேபோல்
எழுந்திருந்தாள் சொக்கப்பன் மனைவி—
" என்றன்
அருமைமிகு மச்சானே காரி யந்தான்
ஆயிற்ரு?" எனக்கேட்டாள் 'அடியே நீயென்
பெருமையினை அறியவில்லை இந்தா ரொக்கம்.
பேசாதே; இன்னென்று—திருப்பு காதை!
பெருந்தொகைதான் இன்றிரவு பெறப்போ
கின்றேன்
பிடித்ததடி அதிர்ஷ்டம்நமை' என்று
சொன்னன்.

வள்ளியிருக் கின்ருளே வஞ்சி யின்தாய்
வைத்திருக்கின் ருள் இப்போ பெரிய செல்வம்
உள்ளிருளில் குடிசையிலே தனியாகத் தான்
உறங்கிடுவாள்; ஒருவர்க்கும் தெரிந்தி டாமல்
நள்ளிருளில் நாம்சென்ருல் காரி யத்தை
நடத்திடலாம் ஆளையே ஒழித்துவிட்டுக்!
குள்ளநரி யடிநானும் பொரித்த ஈரல்
கொண்டுவா சோற்றின்மேல் குவித்து
வைப்பாய்.

என்றுசொலி சொக்கப்பன் அமர்ந்தான்—
சொள்ளை
இலையினிலே சொட்டாகச் சிந்த விட்டுக்
குன்றென்ன அதன்மேலே கட்டிச் சோற்றைக்
கொட்டினுள்! ஈரலினைக் குவித்து வைத்தாள்
'நன்றுகுழம் பூற்றென்று' சொல்லிக்
கொண்டே
நான்கைந்து வாய் உள்ளே தள்ளிவிட்டான்;
"இன்றேது குழம்பென்ருள்?" கொட்டைமுத்து-
'ஈரல்போல் உன்சொல்லும் இருக்கு'தென்ருன்.

இருளின் நடுவிலே தூங்கினுன் இளைஞன்

நகர்நோக்கி விரைந்துசென்ற மருத வாணன்,
நடந்தபெருங் களைப்பாலும் பசியி ஞலும்
மிகச்சோர்ந்து போய்விட்டான்; மேலும் செல்ல
முடியாது மெலிவுற்றே எதிர் இருந்த
நகைக்கடையின் திண்ணையிலே போயமர்ந்து
நனைந்தஉடை தனைப் பிழிந்தான்; 'இடர்கள்
வந்தால்
மிகுத்துவரும்!' எனச்சொல்லித் திண்ணை
யின்மேல்
வெறுப்புடனே பையிரண்டும் வைத்து
யர்ந்தான்.

வழியோர மாய்ச்சொக்கன் ஒளிந்தொளிந்து
வாய்த்ததொரு சுவையெண்ணி யேபிணத்தின்
குழியோர மாய்ச்செல்லும் நரியைப் போலே
கொலைநாறும் உளத்துடனும் வெறியினோடும்
பழியோரமாய்ச் சென்றான்; வள்ளி ஆங்கே
பணத்தாசை யின்ஓரம் படுத்திருந்தாள்!
விழிமூடி நகைக்கடையின் திண்ணை மேலே
மிகவயர்ந்து தூங்கினான் மருத வாணன்.

சூழ்ச்சியின் முடிவு துன்பம் சேர்த்தது

"ஊர்க்காப்புச் சாவடி" ஆள் ஒருவன் ஊரில்
உறுங்காவல் கவனிக்க வழக்கம் போலே
போர்க்காப்புத் துப்பாக்கிக் கையில் தாங்கிப்
பூனைபோல் அடிவைத்துச் சென்றான்; ஆங்கே
தேர்க்கம்பம் போல்நீண்ட உருவம் ஒன்று
சிறுத்தைபோல் ஒருவீட்டில் நுழைதல்
கண்டான்
நீர்க்கோழி போலோடி வீட்டின் ஓரம்
நின்றிட்டான் ஊர்க்காப்போன்; அதற்குள்
வீட்டின்

உள்ளிருந்து பேரொலிதான் கேட்க, கையில்
ஒருசிறிய மூட்டையுடன் வெளியிற் பாய்ந்தே
கள்ளன்தான் கால்வீசி ஓட லானான்!
கணத்தினிலே பின்தொடர்ந்தான் காவலன்
தான்
''கள்ளன் பிடி, பிடி!'' என்றே கூச்சலிட்டுக்
கண்விழிக்கச் செய்தான் அத் தெருவார்
தம்மை!
துள்ளியே அடுத்ததெரு பாய்ந்தான் கள்ளன்
தொடர்ந்தோடி னான் அந்த ஊர்க்
காப்போனும்!

கூச்சலினைக் கேட்டுக், கண் விழித்துக் கொண்ட
கிளிமூக்கன் குதித்தோடித் தெருவில் வந்தான்
பாய்ச்சலிலே திருடனுமே ஓட, முன்பின்
பார்க்காமல் அவன்பின்னே தாவி, ''உன்கால்
வீச்செல்லாம் பலிக்காது தம்பி இங்கே
மிதித்திடுவேன் நில்'' என்று கிளிமூக் கன் தன்
மூச்செல்லாம் பிடித்தோடித் திருட னின் தன்
முதுகினிலே அறைந்தவனைப் பிடித்துக்
கொண்டான்!

தொட ங்தோடி யேவந்த ஊர்க்காப் போனும்
ஃ ள் ளிப்பாய்ந் தோடிவந் தங்கே நின்று
படர் தோடி யேவந்த திருடன் தன்னைப்
பற் றித்தன் கையாலே குத்த லானன்.
உடற் சார்ந்த சொக்கப்பன் "தன்னைப் பற்றி
ஊ ர்க்காப்போ னிடம்விட்டோன் யாவன் ?"
என்று
கடை கண்ணுல் பார்த்திட்டான் கிளிமூக்கன்
தான்
ை ட்டிச் சொக்கனெதிர் நின்றிருந்தான்!

தர யே ஊர்க்காப்போன் புடைத்து
மெய்ம்மை
த ச்சொல்ல வேண்டுமென நெருக்க, "இந்தப்
பெரு கேட்டைக் கிளிமூக்கன் எனக்குச்
செய்தான்
பி மூக்கஅவன் விடுவேனு இனிமேல் நானும்?
இருச் ட்டும்" எனத்தரகன் சூழ்ச்சி எண்ணி
"(வனே தான் திருட்டுக்குத் தூண்டி
விட்டான்
தருண த்திற் கேற்றுற்போல் என்னைக் காட்டித்
த ன்றான் கிளிமூக்கன் இவன்பேர்"
என்றான்.

தரகன் சொல் கேட்டதுமே கிளிமூக்கன் தான்
தாவியவன் மேல்வீழ்ந்தே சாட லானுன்
கரத்தினிலே துப்பாக்கித் தூக்கிக் காட்டிக்
"கைதூக்குக் கிளிமூக்கா, சுடுவேன்" என்றே
உரைசெய்தான் ஊர்க்காப்போன் சீழ்க்கை
செய்தான்!
ஒலிகேட்டுச் சாவடியின் ஆட்க ளெல்லாம்
விரைந்தோடி வந்தார்கள் அவ்வி டத்தே!
மேலேகை தூக்கினான் கிளிமூக் கன்தான்.

துப்பாக்கியுடன் நின்ற சேவகன்தான்
சூழ்ந்துநிற்குந் தோழரிடம் "இப்போ தேநீர்
தப்பாமல் இருவர்க்கும் விலங்கிடுங்கள்,
சரியான திருடர்இவர்" என்று சொன்னுன்!
அப்போதே விலங்கிட்டார்; சொக்கப் பன்தான்
அடக்கியதோர் மூட்டையினை நழுவவிட்டான்
கைப்பற்றி மூட்டையினைக் காவ லாளர்
கடத்திச்சென் றார்அவனைச் சாவ டிக்கே!

அழுதிட்டான் இளிமூக்கன் சொக்கப் பன்தான்
அநியாயம் எனக்கிழைத்தான் என்று
சொல்லித்
தொழுதிட்டான் சேவகரை—வாயை மூடச்
சொல்லியவன் முதுகுதனைப் பதம்பார்த்
தார்கள் !
பழுதற்ற காதலரைப் பழித்தான் ; சூழ்ச்சிப்
பாதையினை வகுத்திட்டான்; இரக்கமேதான்
முழுதற்ற செயல்செய்தான்; முடிவில்
அன்னோன்
முடிவேதான் அவன்வாழ்வை முடித்த
தன்றோ ?

வானகத்தே விண்மீன்கள் கண்சிமிட்டும்!
மாந்தர்நிலை கண்டவைகள் சிரிக்கும் ; அந்தோ,
ஏனகத்தே பொய்வஞ்சம் கொண்டு வீணில்
இயற்கைநெறி மறுக்கின்றார் ? அன்பெனுஞ்
செந்
தேனகத்தே யிருந்திடவும், வெறிபிடித்துத்
திரிகின்ற மக்கட்கும் வாழ்க்கை யுண்டோ ?
கானகத்தே வாழ்கின்ற விலங்கு போலே
களிக்கின்றார் கொலைவாழ்வில், கொடுமை
அன்றோ ?

வையமெலாம் நீள்துயிலில் நிலைத்திருக்கும்!
வஞ்சத்தின் நெஞ்சங்கள் சாவடிக்குள்
பயத்தாலே நடுக்குற்றுத் தூக்கமின்றிப்
பழிச்செயலின் அழிவெண்ணிப் பதைத்தி
ருக்கும்!
புயல்ஓய்ந்த அமைதியிலே இரவு செல்லும்
பொய்யிருளும் மாய்ந்ததென வெள்ளி
தோன்றும்!
கயல்ஓடுங் குளம்,வயல்கள், கடல்,யாவும்பொ...
கதிர்பட்டு மின்னுமிளங் காலை தோன்றும்!

ஒளியாலே விளங்கிற்று வையம்; எங்கும்
ஒளிந்திருந்த தெல்லாமும் வெளிப்படும்; பின்
களியாலே மலர்பூத்துக் குலுங்கும்; தென்றற்
காற்றாலே மகரந்தம் சிந்தும்; கூட்ட
அளியாலே இசைதோன்றும்; பறவை பாடும்!
அங்கங்கே இன்புடனே துன்பங் கூடும்!
எளியோரின் வாழ்க்கையிலே எப்போதுந்தான்
இன்பமெனும் ஒருபொருளே இல்லை
யன்றோ!

ஒளிந்திருந்த தெல்லாம் வெளியாயிற்று!

ஊரார்கள் விழித்தார்கள்; எங்கெங் கோ,தான்
ஓடிப்,பின் வந்தார்கள்; காதை வாயின்
நேராகத் திருப்புவதும், குரலைத் தாழ்த்தி
நின்றேதோ பேசுவதும், கூட்ட மாகச்
சேரத்தான் அஞ்சுவதும், வியப்பு கொண்டே
திரும்புவது மாகத்தான் இருந்திட் டார்கள்.
கூரான ஈட்டியினை முனையி டத்தே
கொண்டுள்ள துப்பாக்கி தோளில் தூக்கி

அணியணியாய் வந்தார்கள் ஊர்க்காப் பாளர்!
அத்தெருவில் அக்குடிசை தனில்நு ழைந்தே
துணிதிணிக்கப் பட்டவாய்க் கிழவி தன்னைத்
தூக்கியெடுத் தேவந்தார்! செத்தி ருந்தாள்!
பிணியறியும் மருத்துவரின் சோத னைக்குப்
பெருங்கிழவி வண்டியிலே அனுப்பப்
பட்டாள்!
மணிகுறித்து, நிகழ்ச்சிகளைக் குறித்துக் கொண்டு
வரிசையாய் ஊர்க்காப்போர் திரும்பிப்
போனார்.

வள்ளியடா அவள்! யார்தான் கொன் றிருப்பார்?
வஞ்சியையும் முதலாளி தன்னி டத்தில்
தள்ளியுமே விட்டாளே! பெரும் பணத்தைத்
தட்டிக் கொண்டிருப்பாள்; ஈ தறிந்தி
ருந்தோன்
துள்ளியுமே வந்தவளைத் தொலைத்து விட்டுத்
தூக்கிக்கொண் டோடினன் பணத்தை! அந்தக்
கள்ளிக்கு வேண்டுமடா' என்றா ரார்கள்
கலந்துகொண் டார்பேச்சில் தம்க ருத்தை!
திருட்டை வளர்ப்பது வையந்தானே?
துயில்நீங்கி எழுந்திருந்தான் மருத வாணன்
சுடர்பசும்பொன் நகைக்கடையின் திண்ணை
மேலே
வெயில்பட்டு மின்னியது; பையி ரண்டும்
வைத்தஇடம் வெற்றிடமாய் இருத்தல்
கண்டான்.
பயில்கின்ற இவ்வையம் திருட்டு வாழ்க்கை!
பசிக்கின்ற மக்கள்தமை நிரப்பி வைத்தால்,
துயில்கின்றோன் கைப்பொருளைச் சுருட்டு
கின்றார்!
சுட்டெரிக்கும் பட்டினிதான் திருடத்
தூண்டும்!

திருடன்எனும் ஒருமனிதன் ஏன்உண் டானன் ?
திருடியதிந் நாடவனின் உழைப்பை !
அன்றேன்
திருடுகிறன் நாட்டினிலே பிறர்செல் வத்தை !
" செல்வமெலாம் ஒருவர்க்கே சொந்தம் "
என்னும்
" குருட்டறிவே பெருக்கியது திருட்டை "
என்பேன்
கொடுமைதனைப் பெருமக்கள் என்போர்
தாமே
பெருக்குகிறர்—ஏழையர்மேல் சுமையை ஏற்றிப்
பிதுக்குகிறர் அவர்விழியை—நீதிதானே ?
என்றுரைத்துத் திண்ணையினின் றிரங்கிக்
கால்கள்
இழுத்த வழி யேசென்றன் ; பசி,வயிற்றைத்
தின்றது;தன் நிலைமையினை எண்ணி சற்றே
திகைப்புற்றன் ; என்விழியில் ஒளியளித்த
பொன்மயிலாம் வஞ்சியினைப் பிரிந்தேன் ;பின்னர்
பொற்புறும்என் நண்பனையும் பிரிந்தேன் ;
பெற்ற
பொன்னையுமே இழந்தேனே—இனியெனக்குப்
பொருள் இல்லை ! துணையில்லை ! ஒன்றுமில்லை !

பசிவந்தே எனைத்தாக்கும், என்செய்வேன் நான்?
பாதையினைத் தொடர்ந்திடவும் முடியவில்லை;
'புசி,வந்தே' என்றென்னை அழைப்பதற்குப்
புதுஊரில் யாருண்டு? காதலாலே
கசிந்துருகும் வஞ்சிநிலை யறியேன் இன்னும்;
கைக்கொண்ட பணியினையும் முடிப்ப
தென்றோ?
கசந்தநிலை எனைவந்து கவ்விற் றென்றே
காதடைக்க நடந்திட்டான் மருதவாணன்.

சோர்ந்த காளையைச் சூழ்ந்தனர் இளைஞர்.

சோர்வுவந் தேஉடலைத் தாக்க, கண்கள்
சுழன்றோட தலைசுற்றக், கால்கள் பின்ன
பார்வையது மங்கிவிடப் பாதை யோரம்
பருத்தடர்ந்து வளர்ந்திருந்த மாமரத்தின்
வேர்மீது போய்வீழ்ந்தான் மருத வாணன்!
வினைமீது குறிவைத்த இளைஞர் சில்லோர்
கார்மீது பாய்கின்ற மின்னல் போலே
கணத்திலே பாய்ந்தங்கு வந்து கூடித்

தூக்கியெடுத் தார்மருத வாணன் தன்னை !
தொலைவினிலே இருந்தவொரு கட்டி டத்தை
நோக்கியுமே நடந்தார்கள் விரைவு கொண்டே !
நோக்கினிலே விரிவுடைய இளைஞர் தாமே
பார்க்குளுயர் பண்புடைய மக்கள் ஆவர் !
பணிக்காவி தருகின்ற துணிவும், இன்னல்
போக்கிவிட உழைக்கின்ற திறனும் இந்தப்
புதுக்கால இளைஞர்க்கோர் பூணும் அன்றோ ?

கேடிட்டோரே கேட்டை அடைந்தனர்

கேடிட்ட தரகனையும் மடமை யோடு
கிடந்துழன்ற கிளிமூக்கன் தனையும் ஆங்கே
மூடிட்ட வண்டியிலே ஊர்க்காப் பாளர்
முறைவழங்கும் மன்றுக்கே அழைத் துச்
சென்றார் !
ஓடினார் ஊரார்கள் பார்ப்பதற்கே ;
உண்மையிதில் உண்டென்றார் ; கிளிமூக்
கன் தான்
தேடினான் அழிவென்றார் ; " அடடா, சூழ்ச்சி
செய்தானே!" என்றார்கள், திரண்டு சென்றார்!

மன்றந்தான் கூடியது தீர்ப்ப ளிப்போர்
வந்தார்கள்; வண்டியினின் றிறங்கி வந்தே
நின்றார்கள் வஞ்சகர்கள் கைதிக் கூண்டில்
நிகழ்ச்சிகள் அனைத்தையுமே ஊர்க்காப்பாளர்
ஒன்றுவிடா தாரைத்தார்கள்;—'மன்றத்தார்கள்
உண்மையினைக் கூறிடுக' எனப்ப ணித்தார்!
கொன்றேன்நான் கிழவியுயிர்; கிளிமூக் கன்தான்
கொலைதிருட்டுக் கெனைத்தூண்டி விட்டான்"
என்றே

தரகனவன் உரைத்தவுடன், கிளிமூக் கன்தான்
தலையினிலே அடித்துக்கொண் டலறி
வீழ்ந்தான்!
உரைத்தார்கள் தரகனுக்குத் "தூக்குத் தீர்ப்பும்
உயிருள்ள வரையினிலே கிளிமூக் கன்தான்
இருந்திடவே வேண்டும்சிறைச் சாலை தன்னில்!"
எனுந்தீர்ப்பும் அளித்தார்கள் மன்றத்தார்கள்!
பெருங்கும்பல் கலைந்ததினைப் பார்த்து விட்டுப்
"பெருவிந்தை யீதென்று" சொல்லிப்
போனார்!

" என்செயலுக் கேற்றபலன் அடைந்தேன் "
என்றே
இருகையாலும் மார்பில் அறைந்து கொண்டே
புன்செயலில் விளைந்திட்ட தரகன் வீழ்ந்தான்!
புதுமலரைச் சேற்றினிலே புதைத்தேன் நல்ல
நன்செயிலே விளைந்திருந்த பயிர்அழிக்க
நாணமிலாக் கிளிமூக்கன் நவின்ற வண்ணம்
வன்செயலைச் செய்தேன்நான் சூழ்ச்சி
செய்தேன்
வஞ்சத்தில் நெஞ்சத்தை நிலைக்க வைத்தேன்!

என்மனைவி எனைத்தேடி இருப்பாள் அங்கே
என்செய்வேன்? என்செய்வேன்?
செத்தேன்! செத்தேன்!
என்றிவைகள் சொல்லியுமே தரகன் கத்த
" என்சூழ்ச்சி யிவனாலே முடித்தேன்,
வீழ்ந்தேன்!
என்மகனை வதைத்தேன்நான்; வஞ்சிக் கேதான்
இடர்செய்தேன், கொடுமைபல இழைத்தேன்,
வையம்
இன்றென்னைப் பழிக்கும்! ஆ! பணத்தினாலே
இறுமாந்தேன் ஏழையரை மதித்தேன்
அல்லன்!

பொன்கொடியாம் வஞ்சியையும் அன்பார்
என் றன்
புதல்வனையும் நானின்று காண்பே னுகில்
மன்னிப்புக் கேட்டிடுவேன் அவரி டத்தில்!
வையகமே என்செயலை மறப்பா யோ,நீ?
என்றைக்கும் பொய்வீழும் எனஅ றிந்தேன்
என்முகத்தைப் பார்க்காதே வையமே நீ!
மன்றெனக்குத் தந்ததொரு தீர்ப்பு நன்றே!
மனிதஅன் பெனக்கில்லை மிருகம் நானே!"

எனக்கதறி யேஅழுதான் கிளிமூக் கன்தான்!
இருவர்க்கும் விலங்கிட்டார் ஊர்க்காப் பாளர்!
வினைக்கேற்ற நிலையுற்றார், சாய்ந்தார்; மன்றம்
வியப்புடனே கலைந்ததுவாம்; சொக்கப்
பன்தன்
மனைவியவள் இதுசேதி கேட்டாள்: அஞ்சி
மனம் நடுங்கி னுள் 'தனையும்பிடித்துக்
கொள்வர்!'
எனநினைத்தே ஓடோடிக் கொல்லை தன்னில்
இருந்ததொரு கிணற்றினிலே விழ்ந்தாள்
மாண்டாள்!

வஞ்சகர் முடிவை வஞ்சி அறிந்தனள்

காலைவர ஒருவாறு பயம்விடுத்தே
காரிகையாம் வஞ்சியவள் எழுந்திருந்தே
சோலைவருந் தென்றலிலே எனைமணந்த
தூயஎன் காதலரை என்று காண்பேன் ?
ஆலைமுத லாளிக்கோ உரிமையானும் ?
'ஆவிசுடுதே என்றே' அழுதவண்ணம்
மூலையிலே உட்கார்ந்து கொண்டிருந்தாள் ;
முதலாளி புரண்டு கிடந்தான்மஞ் சத்தில் !

"கிளிமூக்கன் தூண்டிவிடத் தரகன் சென்றே
கிழவியாம் வள்ளியினைக் கொன்றான் என்றே
அளித்தார்கள் மன்றத்தார் தரக னுக்கே,
அருந்தூக்கு" கிளிமூக்கன் சாகுமட்டும்
நெளிந்திடவே வேண்டுமாம் சிறைகிடந்தே !
நீயறியா யோ ?"என்று வஞ்சி தன்னை
விளித்திட்டான் வேலையாள் ஓடி வந்தே !
'மெய்தானா ?' என்றலறி வீழ்ந்தாள் வஞ்சி !

வேலையாள் பயந்துபோய் வெளியே சென்றான் ;
மெதுவாக வஞ்சியவள் எழுந்திருந்தாள் ;
" காலையிலே நல்லதொரு செய்தி கேட்டேன்
களிப்படைதல் அன்றி இதில்கவலை
கொள்ளேன்
ஆலைமுத லாளியிடம் என்னைத் தள்ளி
அகமகிழ்ந்தாள் என்அன்னை தரகனைப்போல்!
சோலையிலே எமைப்பிரித்தார் கிளிமூக் கர்தான்!
தொலைந்தார்கள் எல்லோரும் நல்லதென்றாள்.

மக்கள் இனம் இத்தகைய மாக்க ளாலே
மாசெய்தும், ஆம்,இவர்கள் மடிதல் நன்றே!
மிக்கமகிழ் வடைகின்றேன் ; சமுதா யத்தின்
வேர்அரித்த புழுக்களுக்கும் இரங்க லாமோ?
தக்கதொரு தீர்ப்பளித்த மன்றம் வாழ்க!
தனிவுடமை யால்கொழுக்கும் தடிய ரெல்லாம்
இக்கணமே இறந்திடினும் நன்றே! இந்த
ஈனரிடம் இருப்பதினும் இறத்தல் நன்றே!

எனக்கூறி ஆர்வத்தால் எழுந்தாள் வஞ்சி!
எழுந்திருந்தான் முதலாளி உளறிக்
கொண்டே!
"கனவொன்று கண்டேன் நான்! 'வஞ்சி இந்தா,
கவனமாய்க் கேளிதைநீ' நானுனக்குக்
கனிஒன்று தந்தேன்நீ உன் கன்னத்தைக்
காட்டினாய் முத்தமிட விழித்துக்
கொண்டேன்!
இனிஎன்ன தடைஅதிலே பெண்ணே?"
என்றான்.
"இக்கனவு பலிக்காது" என்றாள் வஞ்சி!

மருதவாணனால் மகிழ்ந்தனர் இளைஞர்

படுத்திருந்தான் கட்டிலிலே மருத வாணன்
பளிங்கெனவே மின்னுமொரு கட்டி டத்துள்!
அடுத்துட்கார்ந் திருந்தவர்கள் அவனுக் கான
அனைத்தையுமே செய்தவணம் இருந்தார்
ஆங்கே
தடுத்துரைத்தான் அவரிடத்தே மருத வாணன்
'தனக்காகச் சிரமம்மிக வேண்டாம்' என்றே!
தொடுத்துரைத்தார் இளைஞரெலாம் "கடமை
செய்தோம்
துளியும்இதில் சிரமமில்லை எமக்கே" என்றே!

மெதுவாக எழுந்திருந்து, "வணக்கம்! உங்கள்
மேன்மைமிகு தொண்டினையான் மறக்க
மாட்டேன்;
எதுவாக இருப்பினுமே என்றன் ஆவி
இருக்கும்வரை உமக்கேநான் உழைத்து
வப்பேன்;
பொதுவாக இந்நாடு கெட்டதே தான்;
புதுமலர்ச்சி யுறும்உம்மால் இனிமேல்; சாதி
மதுவுண்டு கெடுகின்றார் மக்கள்!" என்றே
மனஎழுச்சி யோடுரைத்தான் மருதவாணன்.

இளைஞரெலாம் கூர்மையுடன் மருதவாணன்
எடுத்துரைத்த சொற்கள்தமைக் கேட்டி
ருந்தார்.
விளைந்ததவர் முகத்தினிலே மகிழ்ச்சி; கண்கள்
மின்னினவாம் ஆர்வத்தால்; "மறுமலர்ச்சி
விளைத்திடவே உழைக்கின்ற கழகம் ஈதாம்!
வேண்டும்இதில் உறுப்பினர்கள் மிகப்பல்
லோர்கள்!
இளைஞர்யாம் சிலபேரே உள்ளோம் இன்று;
இயன்றவரை உழைத்து வருகின்றோம்"
என்றார்.

ஆர்வத்தில் கிடந்திட்ட மருத வாணன்,
"ஆ,ஆ! நான் உய்ந்திட்டேன்" என எழுந்தே
"சோர்வில்லை; புதுவன்மை சேரப் பெற்றேன்;
தொண்டாற்று வேன் இனிமேல் உம்மோ
டே, நான்!
பார்போற்றப் பணியாற்றித் தமிழ கத்தின்
பண்பினை நாம் உயர்த்திடுவோம்; இந்நி லத்தில்
ஏர்பெற்ற செந்தமிழ்மேல் ஆணை யிட்டேன்;
என்னருமைத் தோழர்களே" என்று
ரைத்தான்!

பேருதவி செய்தீர் நீர் எமக்கே; உங்கள்
பெருந்தொண்டை இக்கழகம் பெற்ற தின்று!
யாருதவி யும் இன்றித் தவித்தி ருந்தோம்;
யாங்கள் இனிச் சிறிதேனும் கலங்க மாட்டோம்.
பாருதவி எதிர்பார்த்தால் வீணும்; நாமே
பலத்ததொரு புரட்சியினைத் தோற்று வித்துச்
சேருதவி கொண்டதிலே வெற்றி கொள்வோம்;
'சேர்ந்தெழுவோம்' என்றிளைஞர்
ஆர்ப்பரித்தார்

ஒத்தஉளத் தெழுந்ததுவாம் புரட்சி; திட்டம்
உருவாக்கி னூர்அன்றே! நாட்டு மக்கள்
பித்தத்தை அழித்தெழுப்பும் புரட்சி யே,தான்
பெருவன்மை யுடையதுவாம் தமிழ கத்தில்
எத்திக்கும் சென் றிடிபோல் முழக்க வேண்டும்
இருள்நிலையைச் சொற்பொழிவால் எடுத்துக்
காட்டிக்
கொத்துகிற முதலாளிக் கும்பல் தன்னைக்
குப்புறவே தள்ளிவிட முயல வேண்டும்

ஓரினத்து மக்களுளே பிரிவும், சாதி
உண்டாக்கித் திண்டாடும் நிலையும், மக்கள்
பேரியலை மறந்துபொருள் ஏற்றத் தாழ்வால்
பெருங்கேடு விளைப்பதுவும் விதியைக் கூறிப்
பாரியலில் செந்தமிழர் ஏற்றங் கொள்ளும்
பாதையினை அடைப்பதுவும் யாவும் இங்கே
ஓர்நொடியில் வீழச்செய்வோம்!
தொண்டொன்றே நம்
உயிர் என்போம்! எடுத்தடிமுன் வைப்போம்
இன்றே!

எனப்பலவும் புகன்றெழுந்தார் இளைஞர் ஆங்கே
இளங்கதிர்போல் ஒளிர்ந்தனனும் மருத
வாணன்.
சுனைப்படுநீர் போல்நெஞ்சில் ஊறிவந்த
சுடர்கருத்துக் கள்அனைத்தும் புரட்சிப்போரின்
முனைப்படுமோர் திட்டமதாய் வகுத்துக் காட்டி
'முடிவுரைப்பீர் தோழர்களே' என்றான் "வீரக்
கனல்மூட்டும் நீரேஎம் தலைவ ராவீர்
கட்டளையிடுவீர்!" என்றார் இளைஞரெல்லாம்.

நாளையே நம்பணியைத் தொடங்க லாம்நாம்
நகர்,சிற்றூர் எங்குமே பறந்து சென்று
தோளையே உயர்த்திச் சொற்பொழிவு செய்வோம்
துன்பம்வரின் ஏற்றிடுவோம் நரிபோன்
றோர்கள்
ஊளையே இட்டிடினும் கூலிக் காரர்
ஊறுபல செய்திடினும் அடல் மிகுத்த
காளையே போல்நின்று முழக்கு வோம்நாம்
கடல்போலே" என்றுரைத்தான் மருத
வாணன்.

வஞ்சி ஆபத்தில் வழுக்கி வீழ்ந்தனள்

பகற்போது நழுவிற்றுப் பின்னிருந்தே
  பாய்ந்தோடி வந்ததுவாம் அந்திப் போது
இகல்தீர்ந்த தென்றெண்ணி ஆலைக் காரன்
  இன்புற்றான் இளவஞ்சி கொல்லவந்த
குகைப்புலியாய்க் கருதினாள் அந்தி தன்னை!
  குளிர்தென்றல் தனை அவளும் வெறுத்தாள்
மூடும்
புகைப்பனிபோல் வரும் இருளைக் கண்டு, வஞ்சி
  புழு நெருப்பில் வீழ்ந்ததுபோல்
புலன் துடித்தாள்
காதலனை நினைத்திட்டாள் ஆலைக் காரக்
  காதகனைக் கண்டவுடன் பதைபதைத்தாள்
" மாதே,ஏன் தாமதம்? நீ மஞ்சத் தின்மேல்
  மயிலென்ன நின்றாடு வா,வா சும்மா!
ஏதேது வெட்கந்தான் கொண்டாயோ, நீ?"
  என்றுளறி முதலாளி வந்தான்; வஞ்சி
தோதேதுந் தெரியாமல் உளந்துடித்தாள்
  " சுவையான மதுகொஞ்சம் பருகு—பின்னர்

ஓடிவிடும் நாணமெலாம்" என்று சொல்லி
ஒந்திபோல் அவளருகில் சென்று "பெண்ணே
கூடிவிடத் தடையென்ன? இந்தா கொஞ்சம்
குடித்துவிடு என்று,மது நிறைந்த சாடி
மூடிதனைத் திறந்திட்டான்; வஞ்சி, அன்னோன்
முகத்தினிலே உமிழ்ந்து மதுதனைக்
கவிழ்த்தாள்
"ஏடி. ஏ!" எனக் கூவித் தன்கையில்தான்
இருந்ததொரு கண்ணாடி மூடிதன்னை

எறிந்தனனும் முதலாளி வஞ்சியின்மேல்.
'ஏ' என்றே அலறியுமே வீழ்ந்தாள் வஞ்சி.
வெறியாலே மீதியுள்ள மதுவைப் பின்னும்
விரைவாக உறிஞ்சிவிட்டு "இவள்தான் என்ன்
சிறியபெண்......!" என்றுளறிப் படுக்கை
தன்னில்
சேர்ந்ததிலே வீழ்ந்திட்டான் வஞ்சி யாங்கே
வெறுந்தரையில் குருதியிலே புரண்டாள் மிக்க
வேதனையால் வதைந்துபின் மூர்ச்சையுற்றாள்!

வஞ்சியவள் தலையினிலே பலத்த காயம்
வாய்பிளந்து விட்டதுபோல் சதைதொங்கிற்று!
மிஞ்சியமதுக்குடியின் மயக்கத் தாலே
மேல்நிகழ்ந்த தெதுவுந்தான் அறியாளுகி
நஞ்சொத்த முதலாளி தூங்க வஞ்சி
நலிவுற்று நினைவின்றி யேஅன் னத்தின்
குஞ்சொன்று கீழ்வீழ்ந்து கிடப்ப தைப்போல்
கிடந்திட்டாள்—நடந்திருள் கொடுமை
தன்னில்.

மறுமலர்ச்சிக் கழகம் மார்தட்டி நின்றது

தேங்காயின் மேற்ருேலை உரித்து வெண்மை
தெரியஉடைத் தாற்போலே இருள்ச ரித்தே
ஓங்குகதிர் ஒளிபாய தெளியும் ஞாலம்!
ஒளிர்பொன்னின் குன்றமென விண்ணி
லெங்கும்
வீங்குமுகில் விளங்கும்வான் தங்கக் கோட்டை!
மேற்றிசையில் பலவண்ணச் சித்தி ரங்கள்!
தீங்குரலில் புள்பாடும்! கடல்மு ழக்கும்!
சிற்ருெலியும் பேரொலியும் கைகலக்கும்!

உணர்வெழுப்பி வந்ததுவாம் காலை; மக்கள்
உடல் எழுப்பிச் செயல்எழுப்பத்
தொடங்கலானார்
மணல்எழுப்பும் கோட்டையவர் செயல்கள்
அன்றோ?
மறையாத புகழ்எழுப்பி வாழ்வதற்குத்
தணல் எழுப்பிச் சிறுமையினை எரிக்கவேண்டும்
தக்கமுறை யறியாதார் மிக்க உண்டு
மணம் எழுப்பி வாழ்க்கையிலே மகிழ் வெழுப்ப
மறுமலர்ச்சிக் கழகத்தார்' விரையலானார்!

இன்றிங்கு மாலையிலே மருத வாணர்—
இக்கழகத் தலைவர்சொற் பொழிவு செய்வார்
"வென்றிங்கு வாழ்வம்" எனும் பொருளைப்
பற்றி
விரிவுரைதான் ஆற்றிடுவார்! யாவருந்தான்
நன்றிங்கு வந்திடுக கடமையெண்ணி!
நலிவனைத்தும் வீழ்த்திடவும் உழைத்திடாமல்
தின்றிங்குக் கொழுக்கின்ற சிறுகூட்டத்தைச்
சிதைத்திடவும் சேர்ந்தொன்றாய் வருக" என்றே

கரும்பலகை தனில்எழுதி மறுமலர்ச்சிக்
கழகத்தின் வாயிலிலே வைத்தார் எங்கும்
பெரும்பலகை களில்எல்லாம் எழுதி வைத்தார்
பிறங்கினவாம் வீதியெலாம் புரட்சி சொற்கள்
"இருந்தாற்போ லிருந்தேதான் இவ்வெழுச்சி
எழுந்ததிக் கழகத்தில்" என்றார் மக்கள்
திருந்தாத நாடுதனைத் திருந்த வைக்கத்
திரண்டெழுமுயன் றார்இளைஞர் அக்கணத்தே

அடிபட்ட மானின் ஆற்றொணாத்துயரம்

மேல்ஏறிச் சென்றகதிர் மாடி சன்னல்
மீதேறிச் சென்றுள்ளே நுழைய வீங்கும்
தோல்ஏறிப் பருத்தவுடல் கொண்ட அந்தத்
தொப்பைமுத லாளியவன் மஞ்சம் விட்டுக்
கால்நழுவிக் கீழ்வீழ்ந்தான் கண்விழித்தான்
"காலையா இப் போதென்றே" எழுந்திருந்தான்
"வேல்ஏறி இருக்கின்ற விழியினால் என்
மெய்யேறி இருக்கின்ற உயிர்வதைக்கும்

வஞ்சிஎனை வந்தேதான் தூக்க வில்லை
மற்றவள்தான் என்னருகில் இல்லை மேலும்
கொஞ்சமுமே அவள் என்சொல் கேட்டாளில்லை
'கோடி' அது மிரள்கிறது திருத்தவேண்டும்
பஞ்சாலை முதலாளி என்பேர் சொன்னால்
பயந்திடுவர் யாரும், அவள் அறியமாட்டாள்
அஞ்சாறு நாள்சென்ற பின்னர் நான்தான்
அடக்கிடுவேன் அவளை என் இடதுகையில்"

இவ்வாறு முதலாளி சொல்லி, கண்ணை
இப்பக்கம் திருப்பினான் பயந்து விட்டான்
செவ்விளநீர் பிளந்ததுபோல் தலையின் தோற்றம்
தெரிந்ததுவாம் "வஞ்சியிவள் ஏன்வீழ்ந்
தாளோ?
எவ்வாறு மண்டையினை உடைத்துக்
கொண்டாள்?
"இஃதிவளின் பெருஞ்சூழ்ச்சி" என்றே
அன்னோன்
ஒவ்வாத சொற்பேசி "வேலைக்காரி,
ஓடிவா!" இங்கென்றான் கிழவிவந்தாள்!

" இவளை நீ எழுப்பிடுவாய் கட்டிலின் மேல்
இருத்தியுமே தலையிலொரு கட்டு, கட்டு!
இவளைவிட் டெப்போதும் நீங்கி டாதே
ஏதேனும் கேட்டால்நம் ஆளிடத்தில்
விவரம்சொலு தந்திடுவான் கொண்டுவந்தே!
வித்தையிவள் செய்கின்றாள் பார்க்கின்
றேன், நான்!
கவனித்துக் கொள்வாய், நீ! தந்திரத்தால்
கள்ளியிவள் உண்மையறி" என்றுகூறி

வெளியினிலே முதலாளி சென்றான் வஞ்சி
விழிதிறந்தாள், கிழவி, அவள் அருகேசென்று;
" கிளியே, நீ எழுந்திடுவாய்—என்ன வேண்டும்?
கேள்கொண்டு வரச்சொல்லித் தருகின்
றேன் நான்
துளியேனும் வருந்தாதே என்று சொல்லித்
தூக்கினாள் வஞ்சிதனைக் கைகொடுத்தே!
நெளிந்திட்டாள் புழுப்போலே வஞ்சி பற்றும்
நெருப்பென்ன கொதித்ததுடல்.
மெலிந்திருந்தாள்

மெல்லியவெண் துகில்கொண்டு கட்டு கட்டி
மிகக்காயம் பட்டுள்ள தலைமறைத்தே
"நல்லியலே படுத்துக்கொள்" என்று சொல்லி
நரிக்கிழவி வஞ்சியினைக் கட்டிலின்மேல்
மெல்லதுயில் கிடத்தினாள்—கஞ்சி தந்தே!
மிகுபசியைத் தணித்தபின், "என்றனக்கு
நல்லதொரு துணையாகக் கிடைத்த தாயே!
நான்மறவேன் இந்நன்றி" என்றாள்வஞ்சி!

(வேறு)

கவ்விய இருளில் பட்டக்
களங்கனி யானாள் வஞ்சி
ஒவ்வொரு நொடியும் கன்னி
உயிர்தனை யறுக்கும்! 'நேரம்
எவ்விதம் போமோ?' என்று
எண்ணுவாள் எண்ணு முன்னே
செவ்வைசெய் காலம் எங்கோ
சென்றிடும் நின்றி டாமல்!

காதலன் நினைவு வந்து
　　காரிகை உளம்பு குந்து
நோதலைச் செய்யும் காய்ச்சல்
　　நூறு 'எண்' தாண்டும் தீயில்
வேதலை யன்ன வஞ்சி
　　வெந்தனள் தன்னுயிர்தான்
சாதலை யடையும் என்று
　　தனக்குளே முடிவு செய்தாள்

உளநிலை ஒருவ ழிக்கண்
　　உற்றிடா துருளும்! இந்தத்
தளர்நிலை யடைந்து வஞ்சி
　　தவித்தனள் துன்பங் கண்டே
இளகிய மனத்தி னோடு
　　வெய்யிலும் ஏகும், வஞ்சி
விளைந்ததோர் உறக்கந் தன்னில்
　　வீழ்ந்தனள் விழிகள்மூடி!

கழகம் அடைந்து களித்தனர் மக்கள்

புதியதொரு பரபரப்பு! இளைஞரெல்லாம்
புதுப்பார்வை தாங்கியுமே நடந்து சென்றார்;
முதியவரும் மகளிரும்ஆங் கொருங்கு கூடி
முகமலர்ச்சி யொடுசென்றார்! தென்றல் வந்தே
எதிர்கொண்டழைத்தவர் தம்மை; மாலை
இனிமையினைக் குழைத்தூட்டிக் குளிர்ச்சி செய்ய
கதிரவனும் மேற்றிசையில் மறைந்து வில்லின்
காட்சியிலே தமிழ்ஆட்சி காட்டிச் சென்றான்.

மண்டுகடல் போல்மக்கள் முழக்கம் செய்தே
மறுமலர்ச்சிக் கழகத்தில் போய்நிறைந்தார்;
தண்டமிழில் இடியென்ன மருதவாணன்
தான்நின்று பேசினான் மேடை மீதில்!
பண்டுதமிழ் நாட்டினிலே "உன்மகன்தான்
பகைப்போரில் புறமுதுகு காட்டிவிட்டான்
கண்டேன்நான்!" எனஒருவன் கழறக்கேட்டுக்
கனல்சுக்கும் கண்களுடன் துடித்தெழுந்தே

" என்மைந்தன் புறமுதுகு காட்டி யாங்கே
இருப்பானேல் இப்போதே சென்றே
அன்னேன்
பொன்மலர்வாய் பூரிக்கப் பால்கொ டுத்த
புன்மார்பை அறுத்தெறிவேன் " எனவாள்
ஏந்திச்
சென் றுபறந் தலைப்புக்கு மகனைத் தேடித்
திருமார்பில் அடிபட்டுக் கிடத்தல் கண்டு
" நன் றிவனைப் பெற்றபயன் அடைந்தேன்
இன்றே
நற்றமிழர் மானமிவன் காத்தான் " என்றே

மறச்சிரிப்பு சிரித்ததமிழ் வீரத் தாயின்
வழிவந்த தாய்மாரே ! தோழி மாரே !
நிறவேலைக் கொல்லனுலை வடிக்கு முன்னே
நீள்கையில் தினவேறத் துடித்து நிற்கும்
மறத்தமிழர் தம்மக்காள் ' தமிழுக்கே எம்
வாழ்க்கை !' என உயிர்வாழும் பெரியோரே நல்
அறம்வளர்க்கும் அன்புடையீர் ! வணக்கம்.
நாட்டின்
ஆக்கத்தில் ஊக்கங்கொண் டுழைப்பீர்
இன்றே !

'மறுமலர்ச்சிக் கழகம்'எனைத் தலைவ னுக்கி
மகிழ்ந்தது ;நான் மகிழ்கின்றேன்; எனினும்
மக்கள்
உறுமலர்ச்சி இளைஞர்தம் உழைப்பால் அன்ரே ?
உதவிடுவீர் இளைஞர்களே உம்உழைப்பை !
நறுமலரில் தேனுண்டு குடிக்க வண்டு
நடுங்குவதேன் ? நாடுண்டு செல்வ முண்டு !
வறுமையேன் நாம்கொண்டு கிடக்க வேண்டும் ?
வகையறியா திருப்பதுவும் தகுதி யாமோ ?

"சிலருக்கே செல்வமெலாம் சொந்தம்'' என்பார்
சீறித்தான் கேட்டுவிடில் கெட்ட தென்பார்
மலரயனின் படைப்பினிலே பேத முண்டு !
'மகராசன்' 'ஏழையெனும்' பிரிவும் உண்டு
'தலைவிதி'போல் நடந்திடும்நாம் முயன்றிட்
டாலும்
தழைத்ததோரு செல்வத்தை அடைய
மாட்டோம் !
பலகாலம் வறுமையினைப் பொறுத்திருந்தால்
பரமனருள் கிடைக்கும்''எனச் சொல்லு
வார்கள்

'பலசாதி இருப்பதுவும் நன்றே' யென்பார்
'பழையமுறை மீறுவது பாபம்' எனபார்
நிலமீதில் தொழிலாளர் துன்பம் நீக்க
நியாயந்தான் கிடைத்திடுமோ? 'முன்பிறப்பில்
குலமுறைதான் மீறியதால் ஏழை வாழ்க்கைக்
கொண்டான் இப்பிறவியிலே' என்பார் - இந்தக்
கலைசொல்வார் இதைக் கேட்குந்
தொழிலாளர்க்குக்
கருத்தினிலே புரட்சியுமே எழுதல் உண்டோ?

குடிசையிலே வாழுவதும் கூழ்குடித்துக்
கும்பிட்டுக் கிடப்பதுவும் 'விதி'யால் என்றால்
படியினிலே முன்னேற்றங் கொள்ளு தற்குப்
பாட்டாளி ஏழைகளும் எண்ணு வாரோ?
துடுக்குடையார் 'விதி'சொல்வார் பிரிவு
சொல்வார்
சொல்கின்றேன் உமக்குநான் பிறப்பால் பேதம்
அடுக்காது பொருள்ஏற்றத் தாழ்வு கொள்ளல்
அநியாயம் ஆம்! இந்தப் புதுமை கேளீர்

'உருசியர்கள்' வாழ்நாட்டில் யாவருந்தான்
ஒன்றென்று கூறுகிறார் எல்லோருக்கும்
பெருகுதொழில் 'கட்டாயக் கல்வி' உண்டு
'பெருஞ்செல்வர், வறியர்' எனும் பேச்சே
இல்லை
திருடர்தான் அங்குண்டா? பிச்சைக் காரர்
தேடினுமே அங்குண்டா? இல்லை—இல்லை!
உரைக்கின்றார் ரேவிதியும் உயர்வு தாழ்வும்
ஒன்றவில்லை ஏனிவைகள் அந்த நாட்டில்?

மாதர்எலாம் உரிமையுடன் வாழ்வார் அங்கே
மாண்புடையீர் அந்நாளில் தமிழ்நாட் டின்கண்
தீதேதும் இன்றியுமே மாதர் வாழ்ந்தார்!
சிறிதேனும் அவர்அடிமை உறவேயில்லை
பாதியிலே இந்நிலைதான் வந்த திந்தப்
பாழ்நிலையை வீழ்த்திநாம் 'உருசியா'போல்
நீதிசெய் தேவாழ்வோம் நிமிர்ந்து நிற்பீர்!
நிகர்என்போம் யாவருமே இந்த நாட்டில்!

இன்றேஇக் கழகத்தில் சேர்வீர்—தொண்டில்
இசைந்திடுவீர் தமிழர் இனம் தழைக்கச்
செய்வீர்!
ஒன்றேஇந் நாட்டிலுள தமிழரெல்லாம்
ஒன்பதுகோ டிப்பிரிவை ஒப்பி டாதீர்
புன்மைநிறைச் சமுதாயம் சீர்தி ருத்திப்
பொதுவுடைமை அமைத்தினப வாழ்வு
கொள்வோம்!
வன்மைநிறை இளைஞர்காள் சேர்ந்து வாரீர்!
வணக்கம்; என் சிற்றுரையை முடிக்கி
றேன்நான்.
எழுச்சியுரை மழைபொழிந்த மருத வாணன்
இடியிடித்து விட்டதுபோல் முடித்து
விட்டான்
விழி,கனலில் தோய அவன் விளங்கி நின்றான்
மெய்சிலிர்த்தார் மக்களெலாம் "மறுமலர்ச்சிக்
கழகத்தின் நற்றலைவர் வாழ்க" என்றே
கைதட்டி னார்இளைஞர் ஆர்ப்ப ரித்தார்!
விழிப்புற்றார் கழகத்திற் பல்லோர் சேர்ந்தார்
வெற்றியுடன் கூட்டந்தான் முடிந்ததன்றே!

பெரியதொரு மனமாற்றம் உற்ருராகிப்
பெருமக்கள் தம்இல்லம் திரும்பினூர்கள்!
உரியதொரு பேரன்பால் மருதவாணன்
உடனிருந்த இளைஞர்மிக மகிழ்வடைந்தே
"அரியதொரு சொற்பொழிவை ஆற்றினீர்கள்
ஆம், நீரே எம்தலைவர்" என்றுகூறி
விரித்திருகை சேர்த்தணைத்தே உளம்நெகிழ்ந்தார்
மெய்இன்பம் இதுவன்ருே இளைஞருக்கே?

திட்டம்போட்டு செயலைத் தொடங்கினர்

நம்கழகத் திட்டம்போல் நாட்டில் எங்கும்
நாம்சென்று சொற்பொழிவு செய்யவேண்டும்
'இம்'எனுமுன் சிறகுவிரித் தெழுவதற்கே
இப்போதே ஆயத்தஞ் செய்துகொள்வீர்!
'சும்மா' இருந்தால்காலம் செல்லும் நாளை
சூரியனும் புறப்படுமுன் கிளம்பவேண்டும்"
இம்முடிவைத் தெரிவித்தான் மருததாணன்
'எழுந்திட்டோம்' என்ருர்கள் இளைஞ
ரெல்லாம்.

நரிக்கிழவிக்கு ரகசியம் தெரிந்தது

நரிக்கிழவி வஞ்சி அருகேயி ருந்தாள்
  நடக்கமுடி யாமல்முத லாளி வந்தான்
"சரி,கிழவி இவள்செய்தி என்ன?"' வென்றான்
  —"சரியான காய்ச்சல்வாய் பிதற்று கின்றாள்
தெரியாதே என்அன்பர் மருத வாணர்
  சென்றிருக்கும் இடம்என்று சொல்லிப்
                                            பின்னர்
மரியாதை யாய்ப்போடா பணத்தி னுக்கு
  மண்டியிடும் முதலாளி யே"யென் கின்றாள்

என்றுநரிக் கிழவியவள் சொன்னாள்; "ஏடி
  எவன்மருத வாணன்? அவன்எங்கே
                                            உள்ளான்?
கொன்றுவிடு வேன்அவனை—என்னி டத்தில்
  கொல்லுங்கைத் துப்பாக்கி இரண்டிருக்கும்
என்றவனும் அறியாது போனான்; சீ சீ!
  இவளும்அவன் மேல்தானே ஆசை வைத்தாள்?
நன்றாக இருக்கஇவள் எண்ண வில்லை
  நானிவளைத் தப்பவிட மாட்டேன்" என்று

சொன்னவண்ணந் தன்தலையைச் சாய்த்துக்
கொண்டு
தொப்'பென்று போய்வீழ்ந்தான் படுக்கை
மீதில்!
" சின்னவள் இப் பெண்! உலகம் அறியமாட்டாள்
தெரியவில்லை சுகமாக வாழ்வ தற்கு
பொன்னருகில் இருக்கின்றாள்--இன்னல் ஏனோ?
பூமேலே படுத்திருக்கத் தெரிய வில்லை"
இன்னவணம் நரிக்கிழவி சொல்லி விட்டே
" இவள்உண்மை அறிதல்என் வேலை"
என்றாள்.

புரட்சி எங்கும் பொங்கி நின்றது

(வேறு)

இரவொடு பகலும் ஓட
இயன்றன நாட்கள் எங்கும்
புரட்சியின் வாடை தோன்றிப்
புத்துணர் வெழுந்த தாமே!
" உரமிகும் இளைஞன் அன்றோன்
ஒவ்வொரு சொல்லும் வாளின்
பெருவொளி வீச்சுப் போலாம்!
பெயர்தான் மருத வாணன்"

என்றுமே பேசலானார்
  எழில்தமிழ் நாட்டு மக்கள்
ஒன்றுமே அறியா தோரும்
  உறங்கியே கிடந்தார் தாமும்
என்றுமே இல்லா வண்ணம்
  எழுந்தனர்; மருத வாணன்
தன்பெயர் கேட்டு மக்கள்
  தன்னுணர் வுள்ளம் பெற்றார்!

பட்டிகள், குப்பம், பாக்கம்
  பாழ்கொளும் சிற்றூர், பேட்டை
தொட்டிகள், தோப்பு, மேடு,
  துரைகள்வாழ் நகர மெங்கும்
கட்டிளங் காளை சென்று
  'கர்ஜனை' புரிந்து வந்தான்
ஒட்டிய பேதம் வீழ்த்த
  உயிர்தர முனைந்து நின்றான்.

இளைஞர்கள் ஏழை மக்கள்
இருளினில் உழைத்து ழைத்துக்
களைத்திடுந் தோழர் யாரும்
கலந்தனர் ஒன்று "நம்மை
வளைத்திடும் 'முதலாளித்வம்'
வதைத்திடும் ஏற்றத் தாழ்வு
விளைந்திடும் மடமை யாவும்
வெட்டிட வேண்டும்!" என்றார்.

களிப்புடன் மறுமலர்ச்சிக்
கழகத்தில் சேர்ந்தார் ஆர்வத்
துளிர்ப்புடன் தொண்டு செய்யத்
துணிந்துதோள் தட்டி நின்றார்!
விளித்தனன் மருத வாணன்
வீறுடை மறவர் தம்மை!
அளித்தனன் புரட்சிக் கான
ஆக்கத்தை, ஊக்கந் தன்னை!

தொழிலாளர் ஒன்று சேரத்
  தொடங்கினர்; மருத வாணன்
வழியினைக் காட்டி நின்றான்
  வகையுறத் தொடர லானார்
விழிதிறந் திட்டார் நாட்டார்!
  வீறுதான் கொண்டார் 'துன்பம்
அழித்துமே வாழ்வோம்' என்றே
  ஆர்த்தனர் அதிர வையம்!

கடிதம் வஞ்சியின் காதலை உரைத்தது

காய்ச்சலால் படுக்கை யாகக்
  கட்டிலில் கிடந்த வஞ்சி
தேய்ந்ததோர் உடலும், உள்ளம்
  சிதைந்ததோர் நிலையும் பெற்றாள்
மாய்ந்திடா தெவ்வா றோதான்
  மற்றவள் பிழைத்தாள் மீண்டும்
பாய்ந்தன அவள்உள் ளத்தில்
  பழையஎண் ணங்கள் யாவும்

அங்காரிக் கிழவி வஞ்சி
உண்மையை அறிவ தற்குப்
பொய்ந்நெறிச் சென்றாள் !—நம்பும்
பொருள்படப் பேச லானாள்
இன்னலை ஆற்று ளாகிக்
கடிதமொன் றெழுதி வஞ்சி
தன் றலை யணைகீழ் வைத்தாள்
தலைவன்பால் சேர்க்க எண்ணி.

அன்னதோர் கடிதந் தன்னை
அங்காரிக் கிழவி கண்டாள்
முன்னதாய் முதலா ளிக்கு
முற்றுமே சொல்லி விட்டாள் !
அன்னவன் வந்தான் ஓடி !
அக்கடி தத்தைப் பற்றி
"என்னடி வஞ்சி என்னை
யார்என்று நினைத்தாய்?" என்றான்

கடிதத்தைப் படித்தான்—" அன்ப
கமழ்மணச் சோலை விட்டே
நொடிக்குளே பிரிந்தோம்; பின்னர்
நூறுமாற் றங்கள்; என்கைப்
பிடித்திட ஆலைக் காரன்
பெருவலை விரித்தான் உங்கள்
அடியினில் இறப்ப தற்கே
அமயந்தான் வாய்ப்ப துண்டோ?

'என் அன்ப மருத வாண!'
என்றுநான் சொல்லிச் சொல்லித்
துன்பத்தை மறந்தி ருக்கத்
துணிகின்றேன் முடிய வில்லை!
நின்னிருப் பிடமும் ஊரும்
நீண்டதோ? அருகி லேயோ?
என் அன்னை செத்தாள்; நுந்தை
இருக்கிறார் சிறையில்—மேலும்

இனிஉயிர் வாழ்வ தென்ற
 எண்ணமும் இலையெ னக்கே!
தனியாக இவ்வி டத்தில்
 தவிக்கிறேன் இறந்த பின்னர்
நினக்கிந்த கடிதம் சேரும்
 என்றிடும் நினைவி னாலே
மனக்குறை ஆற்ற ளாகி
 வரைந்திட்டேன். முத்தம்—அத்தான்!

முதலாளி அதிக மூர்க்கம் கொண்டான்

இன்னணம் உங்கள் வஞ்சி"
 எனப்படித் தேமு டித்து
பின்னும்அக் கடிதந் தன்னைப்
 பின்புறம் திருப்பிப் பார்த்தான்!
"உன்னையும் அந்தப் பையல்
 உயிரையும் ஒழிக்கா விட்டால்
என்னையார்? என்று பார்நீ"
 என்றவன் சினந்து நின்றான்.

ஆலையி லின்ருேர் ஆள்தான்
அப்போதில் அங்கு வந்தே
“ வேலைக்கு வந்த ஆட்கள்
விளைக்கின்ருேர் கலவ ரந்தான் !
கூலிதான் குறைந்து போச்சாம்
கூச்சலைக் கிளப்பு கின்ருேர்
மாலையில் கூட்டம் போட
மார்தட்டு கின்ருேர் ” என்ருன்.

தொழிலாளர் உரிமையைத் துச்சமாய்க் கருதிஞன்

“ கழுத்தினைப் பிடித்து தள்க
கழுதைகள் வெளியே றட்டும்
இழுத்துமே கதவை சாத்தி
இடுகதாள் ” என்ருன்—ஆளும்
தொழுதுமே சென்ருன் அங்கே
தொழிலாளர் ஆர்ப்ப ரித்தார் !
“ அழைப்போம்நம் மருத வாணர்
அவர்களை ” என்ருர் ; சென்ருர் !

தலைவனை அழைக்க தந்தி பறந்தது

மூடிய ஆலை விட்டு
முழக்கிடும் கடலைப் போலே
கூடியே சென்றார் தந்தி
கொடுத்தனர்; மருத வாணன்
ஓடியே வந்தான் சொந்த
ஊரினை நாடி; மக்கள்
பாடினார் புரட்சிப் பாட்டுப்
படையினைத் திரட்ட லானார்

மீண்டும் வஞ்சியை மிரட்டினான் குடியன்

(வேறு)

மாலையினை எதிர்பார்த்தார் மக்க ளெல்லாம்
வஞ்சியினை முதலாளி மிரட்டலானான்!
தோலையுரிப் பேன்ஆலை தனையும் மூடச்
சொல்லிவிட் டேன்; இனிமேல் வீட்டி லேயே
காலையிலும் மாலையிலும் இருப்பேன்—என்றன்
கருத்தைநிறை வேற்றாமல் விடவே மாட்டேன்
பாலைத்தான் குடிக்காத பூனையோநீ?
பாசாங்கு செய்கின்றாய் காய்ச்சல் என்றே!

தலையினிலே காயம்வரக் காரணம்ஏன்?
சாகசமோ? காய்ச்சலிது தெரியும்—அந்த
நிலையில்லாத் தறுதலைநாய் மருத வாணன்
நினைவாலோ நீலிநீ அழுகின்றாயே?
தலைவலியும் காய்ச்சலுமே தீர்ந்து போகும்
சாப்பிடுஇந் தாஇந்தச் சாராயத்தை
விலகுகிறாய் இரு,இரு,நீ!" என்று சொல்லி
விரைவாக 'ஒருகிண்ணம்' உறிஞ்சி விட்டான்

தொழிலாளர் தங்கள் தலைவனைக் கண்டனர்

மயக்கத்தில் முதலாளி கிடந்தான்; வஞ்சி
மனங்குமுறி யழுதவண்ணம் சோர்வினாலே
அயர்ந்திட்டாள் நரிக்கிழவி அகன்று போனாள்
அணிமாலை, பிணிதீர்க்க அடியெடுத்தே
தயக்கமுடன் வைத்ததுவாம்; வெய்யில் தாழ்ந்து
தடையின்றிச் சென்றதுவாம்; புரட்சி காணும்
இயக்கத்தின் உயர்தலைவர் வந்தார் ஆங்கே
எழுச்சியுடன் தொழிலாளர் முழக்க மிட்டார்.

கூட்டந்தான் கூடிற்றுத் தொழிலாளர்கள்
குழு முன்னே போய்நின்றான் மருதவாணன்!
"நாட்டாரே, உழைக்கும் என் நண்பரே, உம்
நல்லுரிமைக் காப்பாற்றப் படவேண் டாமோ?
வாட்டந்தான் உற்றீரே பசியி னாலே
வகைசெய்ய முதலாளி இசைந்திட்டானா?
கேட்டீரே கூலிதான்—கொடுக்க அந்தக்
கிறுக்கன் ஏன் ஒப்பவில்லை? அன்னோன் வாழும்

மாடிக்குச் சுண்ணாம்பு உங்கள் ரத்தம்!
மஞ்சந்தான் உம்உடலின் தோலினாலே
மூடிவைத்து மெருகிட்ட மேற்பூச் சாகும்!
மதுவகைகள், அழகிய 'கார்' எல்லாம் நீங்கள்
தேடியதோர் லாபத்தின் பகுதி; உங்கள்
தோள்வலுவால் முதலாளி வீட்டுத்தூண்கள்
ஆடாமல் இருப்பதைநீர் அறியவில்லை!
அன்றாடம் உம்வியர்வைக் கடலின் மேலே

சுகபோகப் படகோட்டும் ஆலைக் காரன்
சொத்தெல்லாம் உம்எலும்பைச் சந்தனம்
போல்
நகந்தேய இழைத்துழைத்துச் சேர்த்த தன்றோ?
நலிகின்ற உம்விழியின் ஒளியை யள்ளித்
தகதகென அவன்வீட்டில் விளக்குப் போட்டுத்
தடபுடலாய் வாழ்கின்றான்; நீங்கள் எல்லாம்
பகல்என்றும் இரவென்றும் பார்த்தி டாமல்,
பனிஎன்றும், மழைஎன்றும் கருதிடாமல்,

அயராமல் உழைத்தீரே—நெய்து நெய்து
ஆடைகளைக் குவித்தீரே—நீர் அடைந்த
பயன்என்ன? பட்டினியால் வாடு கின்றீர்!
பசையிழந்த உம்மனைவி மக்கள் எல்லாம்
கையாலே மானத்தை மறைக்கின் றார்கள்—
காமத்தால் முதலாளி விலங்கு போன்று
தையலரின் கற்பழித்தல் தொழிலாய்க்
கொண்டான்—
தன்மதிப்பை யிழந்தினிநாம் வாழ லாமோ?

குறைசொன்னோம்; அவன் அதனைக்
கேட்கவில்லை.
குளிர்ந்ததினால் நம்முதுகில் குதிரை யேறித்
தருக்கியுமே நிற்கின்றான்; நிலையு ணர்ந்து
தலைநிமிர்வோம் - முதலாளி வீழ்ந்து போவான்
பொறுத்திருந்த நாள்எல்லாம் போதும்- இன்னும்
பொய்க்கதையும் தலைவிதியும் நம்ப
வேண்டாம்;
செறுத்தெழுவீர் தோழர்களே—இந்த நாட்டின்
சிற்பிகள்நீர்—உரிமைபெறஇப் போ,தே தான்

புறப்படுவீர்—சென்றுநாம் நேரிலேயே
புரட்சிசெய் வோம்,அவனின் வீட்டின்
முன்னே!
இறப்பதற்கும் நாம்அஞ்சோம்" என்று சொல்லி
எடுத்தடிமுன் வைத்திட்டான் மருத வாணன்.
மறத்தமிழர் எழுந்தார்கள் புரட்சி யேந்தி
மார்தட்டிச் சென்றார்கள்; முதலா ளித்வம்
அறவேதான் அழிந்திடுக; அழிக!—நீண்ட
ஆயுள்பெற்றே வாழ்க மருத வாணர்—

முதலாளி வீட்டின்முன் முழக்கம் கேட்டது
வாழ்ந்திடுக வேமருத வாணர்!" என்றே
வானதிரப் பெருமுழக்கஞ் செய்து சென்றுர்!
சூழ்ந்தார்கள் பொதுமக்கள்; தொழிலாளர்கள்
தோளுயர்த்தி முதலாளி வீட்டின் முன்போய்
வீழ்ந்திடுக முதலாளி! வீழ்க இன்றே!
வாழ்ந்திடுக பல்லூழி மருத வாணர்!
பாழ்செய்யும் தனிவுடைமை வீழ்க! என்றே
படைபோலே அதிர்வேட்டுக் கிளப்ப லானுர்!
வஞ்சம் தீர்க்க முதலாளி விரைந்தான்
எழுந்திருந்து வஞ்சியினைப் பிடித்திழுக்கும்
எண்ணத்தால் சென்ற முதலாளி காதில்
விழுந்ததுவாம் இம்முழக்கம்! 'மருத வாணர்
வாழ்க'எனும் சொல்கேட்டான்; வெறி
மிகுத்துக்
"கழுதைகளே இருங்களென" சட்டைப் பையில்
கைவிட்டுத் துப்பாக்கி எடுத்தான்; ஆங்கே
எழும்ஒலிதன் னில்'மருத வாணன்' என்ற
இனியபெயர் கொடிவஞ்சி கேட்டாள்;
—கட்டில்

காதலர் இருவரும் கலந்தனர் சாவில்!

விட்டிறங்கி ஓடினாள் மாடி யோரம்
வெறிகொண்ட முதலாளி பாய்ந்து சென்றே
சுட்டான்கீ ழேகும்பல் நோக்கி; வஞ்சி
சுடர்முகத்தைக் கண்டிட்டாள்; 'மருத வாண
எட்டியெனைப் பிடி!'' என்றாள் தாவி விட்டாள்!
எழில்முகத்தை அவன் கண்டான்;
கதிரவன் தான்
கொட்டினான் செங்கதிரை; குருதி சிந்திக்
குளிர்முகத்தான் வீழ்ந்திட்டான்; கோதை
வீழ்ந்தாள்!

முதலாளி உயிரும் முடிந்தது கணத்தில்

ஈருடலும் அருகருகே கிடக்க, பொங்கும்
இரத்தம்சென் றேகலக்கும் இறுதி நாளில்!
" ஓருயிரும் ஈருடலும் இவரே" என்றார்
'உயிர்பறித்தான் முதலாளி ஒழிப்போம்'
என்றார்.
போருடலைக் கொண்ட தொழிலாளர் சீறிப்
புலிபோலே ஏறினார் மாடி மேலே!
காருடலைக் கொண்ட முதலாளி அஞ்சிக்
கணத்தினிலே தன்னையுமே சுட்டுக்
கொண்டான்.

காணக் கிடைத்தது வஞ்சியின் கடிதம்

எருமைபோல் முதலாளி கிடந்தான் ; நெஞ்சில்
இருந்துசெங் குருதியது வழிந்தோ டிற்று !
"உரிமைதராக் கள்ளனுமே ஒழிந்தான் ; எங்கள்
உயர்தலைவர் தமைக்கொன்றேன் ஒழிந்தான்!"
என்றே
எரிமலைபோல் தொழிலாளர் குமுறினர்கள்.
இரத்தத்தின் ஓரத்தில் கடித மொன்று
விரிந்தவணம் கிடந்ததனைக் கண்டார் ; ஓடி
வெடுக்கென்றே எடுத்தார்கள் படித்துப்
பார்த்தார்.

தலைவர் இருவரை அடைந்தனர் தோழர்

"எம்தலைவர் தமக்குரிமை யான வஞ்சி
என்பாரோ இவர்" என்றார் வியப்பினாலே !
"நம்தலைவர் இரண்டுபேர் இப்போ" தென்றார்
"நாமிழந்தோம் புதையலினை" என்று
சொன்னார்.
'அம்மாவோ' என்றலறி யழுதார் ; மிக்க
ஆத்திரத்தால் முதலாளி மேல்ந டந்தார்
"இம்மாளி லத்தினிலே நீதி யில்லை"
என்றிரங்கி மாடியினின் றோடி வந்தார் !

தொழிலாளர் உலகம் புரட்சியில் தோய்ந்தது

நிலஞ்சிவந்து விட்டது ; வான் சிவந்த தாங்கே
நிறைந்ததொழி லாளர்உளஞ் சிவந்த தாமே!
'குலஞ்சிவக்க வந்தஇவர்க் கெழுப்புவோம் நாம்
கோடியருஞ் சிலை'என்ருர் உழைக்கும் மக்கள்
பலஞ்சிவக்கக் கையுயர்த்திப் 'பாட்டா ளிக்கே
பாரிதுதான் உரிமையாம் ; யாவ ருக்கும்
நலஞ்சிவக்கச் செய்திடுவோம்! மடமை வீழ்த்தி
நாடாள்வோம். உழைக்காதார் காடா
ளட்டும்"

சிலையெழுப்பிடத் திரண்டனர் தோழர்

என்றுரைத்துத் தொழிலாளர், 'மருத வாணன்,
இளவஞ்சி' இவர் உடலைச் சேர்த்தெடுத்தே,
இன்றுரைத்தீர் இறப்பதற்கும் அஞ்சோம்' என்றே
இறந்திட்டீர்!" எனச்சொல்லி ஏந்திச் சென்ருர்—
ஒன்றுரைப்பேன், இனிமேலே உலகந் தன்னை
ஒடிந்துவிழும் மடமையினுல், சூழ்ச்சி தன்னுல்
பொன்றுகளால் அடக்கிவிட முடியா தென்பேன்
புதுவுலகம் பிறந்திடுக! வாழ்க நன்றே!

முற்றும்.

மாஜி மனிதர்கள்

மாக்ஸிம் கார்க்கி எழுதியது

ருஷ்யச் சிறு கதை ஆசிரியர்களுக்குள்ளே மிகவும் புகழ் பெற்றவர் **மாக்ஸிம் கார்க்கி** அவர் எழுதிய நூற்றுக் கணக்கான சிறு கதைகளுக்குள்ளே, "**மாஜி மனிதர்கள்**" என்ற இந்தக் கதைதான் மிகவும் சிறந்ததென்று உலக முழுவதும் பாராட்டிப் புகழ்கிறது.

மாஜி மனிதர்கள் ! — என்ன விநோதமான பெயர் ! —அந்தப் பெயருக்கேற்பக் கதையும் மிக்க விநோதமாகவே இருக்கும்.

இதுவரை இந்திய மொழிகள் எதிலும் இந்நூல் வெளிவரவில்லை. எளிய தமிழில் சுவை குன்றாமல் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

— **எமது அடுத்த வெளியீடு** —